வேண்ட, அவர்களையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு, ராமர் ஸீதையோடு வெகு ஸந்தோஷமாய் அயோத்யை நோக்கிப் புறப்பட்டார்.

வினா 70.—போகும் வழியில் என்னென்ன விசேஷம் நடந்தது? ராமர் கடைசியாய் எங்கே வந்து தங்கி என்ன செய்தார்?

விடை.—போகும் வழியில் தாம் தங்கி இருந்த இடங்கள் ஸமுத்திரத்திற்கு குறுக்கே உள்ள அணை, தான் சிவபூஜை செய்த இடம், கிஷ்கிந்தை ஆகிய இவைகளை ராமர் ஸீதைக்குக் காட்டிக்கொண்டுபோனார். கிஷ்கிந்தை வந்ததும், ஸீதைக்கு ஸுக்ரீவன் பெண்சாதி மற்றைய வானர ஸ்திரீகள் முதலியவர்களை அயோத்திக்கு அழைத்துப்போவது நலமாயிருக்கும் என்று தோன்ற, ஸீதையின் வேண்டுகோளின்படி ஸுக்ரீவனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்பி, எல்லா வானர ஸ்திரீகளையும் அழைத்து வரும்படி சொன்னார். உடனே ஸுக்ரீவன் அவ்வாறே வானர ஸ்திரீகளை விமானத்தில் வந்து ஏறும்படி செய்ய, ராமர் தாம் காட்டில் ஸீதையைப் பிரிந்து கஷ்டப்பட்ட இடங்களை எல்லாம் காட்டிக்கொண்டு, பரத்வாஜ ஆசிரமம் வந்து இறங்கி அவரால் ஆதரிக்கப்பட்டு அங்கே ஒரு நாளிருப்பதாகத் தீர்மானித்தார். உடனே ஹனுமாரை, குஹனிடத்தும், பரதனிடத்தும் தமது வரவை முன்னமேயே தெரிவிக்கும்படி சொல்லி அனுப்பினார்.

வினா 71.—ஹனுமார் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை.—ஹனுமார் சிரிங்கிபேரபுரம் போய், குஹனிடம் ஸங்கதியைச் சொல்லி அவனோடு கொஞ்சநாழி

கை ஆனந்தித்துவிட்டு, அவன் மூலமாய் அயோத்திக்குப் போகும் வழியைத் தெரிந்துகொண்டு, வெகு விரைவாய் நந்திக்கிராமம் வர, அங்குப் பரதர் மிகவும் மெலிந்து மான்தோல் போர்த்துக்கொண்டு ராமாதுவரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே கீழே இறங்கி, மானிட உருவத்தோடு பரதருக்கு ஸமாசாரத்தைச் சொல்ல, அவர் வெகு ஸந்தோஷமடைந்து அயோத்தியை அலங்காரம் செய்யும்படி உத்தரவு செய்தார். இவ்வாறு இவர்கள் ஸந்தோஷித்துக் கொண்டிருக்கையில், புஷ்பக விமானம் நந்திக்கிராமத்தருகில் வந்திறங்க, ராமர் வானர ராக்ஷஸர்களோடும், ஸீதா லக்ஷ்மணரோடும் வெளிவந்தார்.

வின 72.— இவ்வாறு ராமரைக் கண்டதும், பரதர் என்னென்ன செய்தார்?

விடை.—ராமருக்கு வந்தனைவழிபாடுகள் செய்து, அவருடைய பாதுகைகளைத் தனது சிரஸின்மேல் வைத்துக்கொண்டு வந்து அவர் பாதங்களில் ஸமர்ப்பித்து அவரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டார். அதன் பின்பு ராமர் பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும், வந்திருக்கும் வானர ராக்ஷஸாள் தங்கி ஸுகமாய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும், பரதர் செய்யத் தொடங்கி, எல்லாம் ஸரிவர முடித்தார். இதற்குள் ராமர் கௌஸல்யை முதலிய எல்லோர் விஷயத்திலும் நடந்துகொள்ள வேண்டியமாதிரி நடந்துகொண்டு, எல்லோரையும் திருப்திசெய்து வைத்தார்?

வின 73.—ராமர் பட்டாபிஷேகம் எவ்வாறு நடந்தது? அப்பொழுது நடந்த விசேஷங்கள் என்ன

விடை.—பட்டாபிஷேகத்தன்று காலை, ஸுக்ரீவன், நான்கு வானர சிரேஷ்டர்களை நான்கு ஸமுத்திரங்களுக்கும், சில வீரர்களை எல்லா நதிகளுக்கும் அனுப்பி, அவைகளின் தீர்த்தங்களை அதிசீக்கிரத்தில் வரவழைத்து விட்டான். உடனே அயோத்திக் கொலுமண்டபத்தில், வானர ராக்ஷஸர்கள், அயோத்தியா நகரவாஸிகள், வஸிஷ்டாதி புரோஹிதர்கள் யாவரும் வந்து கூடினர். ஆகாயத்தில் தேவர்கள் முதலியோர் வந்து கூடிவிட்டார்கள். மிகுந்த ஆரவாரமத்தியில், வானோர் பூமழை பொழிய, தேவ வாத்தியங்கள் முழங்க, ஹனுமார் பாதஸேவை செய்ய, பரத லக்ஷ்மண சத்ருக்னர் வெண்சாமரை முதலிய விருதுகளை ஏந்தி இருபக்கமும் நிற்க, விபீஷண ஸுக்ரீவர்கள் கண்ணாரக்கண்டு ஆனந்திக்க, ஸகல ரிஷிகணங்கள் முன்பாக, வஸிஷ்டர் ஸகல தீர்த்தங்களாலும் ராமருக்கு வெகு சிறப்பாய்ப் பட்டாபிஷேகம் செய்து முடித்தார். வந்தவர்கள் யாவரும் வெகு ஸந்தோஷமாய்க் கொஞ்சநாள் அயோத்தியில் இருப்பதாகத் தீர்மானித்தார்கள். அந்தப் பட்டாபிஷேக ஸமயத்தில் ராமர் எல்லோருக்கும் ஏராளமாகப் பணம் ஆபரணங்கள் போஜனங்கள் முதலியவைகளை, தங்கு தடையின்றிக் கொடுத்தனர். அப்பொழுது ஒரு அழகிய விலையுயர்ந்த இரத்தினங்கள் இழைந்த மாலை ஒன்றை ஸீதை கழுத்தில் போட்டு அவளுக்கு எந்த வேலைக்காரனிடத்தில் அதிகப் ப்ரீதி இருக்கிறதோ அவனுக்கு அதைக் கொடுக்கும்படி ராமர் சொன்னார். ஸீதை அதைத் தன் கழுத்திலிருந்தெடுத்து, அருகே இருந்த ஹனுமார் கழுத்தில் இட, அவர் மிகுந்த சோபையோடு பிரகாசித்தார். யாவரும் ஹனுமாரைப் புகழ்ந்து பேசினர். இவ்வாறு கோலாஹலமாய்ப் பட்டாபிஷேகம் நடந்தேறியது.

ஸ்ரீராம பட்டாபிஷேக வைபவம்

மத்யமாவதி ராகம் - ஆதிதாளம்

பல்லவி.

மகுடாபிஷேகம் கொண்டானே
ஸ்ரீராமசந்திரன்
மகுடாபிஷேகம் கொண்டானே.

அநுபல்லவி

ஸகல ராஜர்களும் ஸகல தேசர்களும்
ஸகல வேதியரும் ஸகல ஜாதியரும்;
ஸகல மந்திரிகளும் ஸகல தந்திரிகளும்
ஸகல முனிவர்களும் ஸகல மனிதர்களும்
சந்திராதி மூவர்களும் இந்திராதி தேவர்களும
சந்தோஷமாய்ப்பொருந்து சிங்காதனத்திருந்து (மகு)

சரணங்கள்

1. மாதவ முனிவர்கள் புடை கூட
பலவேத வேதியர்கள் மறை பாட
வானவர் ஆனவர் மலர் போட
ரம்பை மேனகை ஊர்வசி நட மாட
மாதலத்துள்ள தீர்த்தமும் ஓது ஸமுத்ர தீர்த்தமும்
வரிசையுடன் ஹனுமான் கொண்டுவர
சோதிமிக்க ஆலத்தி மீதிலக்ஷ்மிப்பெண்கள்
சுபசோபனம் சொல்லிக் கொண்டுவர
வானகத்தில் அமிர்தத்தை மனமிக்க முனிவர்கள்
மகிழ்ந்து மகிழ்ந்தாசிகள் விண்டுவர
ஞானமிக்க நாரதர் கானவித்தை முறைமுறை
காஞ்விதம் பாடிக் கண்டுவர

மகதர்-குகதர் பலர் கவுடர் யவனர்-பலர்
வடுகர்-குடகர் பலர் வளுவர் துளுவர் பலர்
வங்கர் அங்கர்கள் பலர் கொங்கணர் தெங்கணர் பலர்
மாளவர் சாளவர் பலர் லாடர்கள், மராடர் பலர்
வங்காளம் பப்பரத்துளோர் பலர்
கொங்குகீழ் குச்சரத்துளோர் பலர்
வந்தே சந்தித்திறைஞ்சி முடிபணி
யுந்தோறும் பட்டுதிர்ந்த பொடிமணி
வைத்தபதத்தில் உறுத்திட மற்றவர்
சுற்றிலும் ஒற்றிவரச்சில கொற்றவர்
மட்டு வகுத்து வகுத்து வரச்சிலர்
கட்டியம் உரைத்திடு பட்ட செலச்சொல
வாமாபராக்கு வெகு நாமா பராக்கு
ரணவீமாபராக்கு ரகுராமா பராக்கு என
வாசவர்க்கும் கேசவர்க்கும்
ஈசுரர்க்கும் மீசுரர்க்கும்
வல்லோனெனப் பிறர்கள் பல்லோர்களும் துதிக்க
நல்லோர்களும் கதிக்க எல்லோர்களும் மதிக்க, (மகு)

2. பூசுரவஸிஷ்டன் நிசுவாசன்
உரகேசன் குருமுனிவன் பரத்வாசன்
பூசித கௌதமன் உடன்வியாஸன்
மிருகாசிபன் கோசிகன் துருவாசன்
பூந்துலகில் சுற்றிநல்ல மாந்தழை வைத்து திவ்ய
பூரண கும்பம் அவரவர், கொடுக்க
ஏந்துநெய்யும் பொரியும் மாந்தி அக்னிதேவன்
எழும்பி எழும்பிவரக் கொழுந் தெடுக்க
சேர்ந்தமுகூர்த்தம் வந்து சேர்ந்ததெனத் திரண்டு
புண்ணிய புரோஹிதர்கள் கடுகெடுக்க
சூழ்ந்து பலமுனிவர் சாந்தி மந்திரஞ்சொல்லி
அயர்ந்தும் நவக்ரஹஜெபம் தொடுக்க

பூசுரர்கள் உடைகளை வேசியர்கள் உடுக்க
வேசியர்கள் உடைகளைப் பூசுரர்கள் உடுக்க

பூசிய பொடிவகை வேதியர்கள் இறைக்க
வேசியர்மிசை அது வேதியர்கள் இறைக்க

பொன்போலும் சட்டமிட்ட மாளிகை
மின்போலும் சுற்றில் வைத்த பாலிகை

பொங்காரம் சுற்றிலும் பளபளென
எங்கேயும் சித்திரம் தளதளென

புத்தமிர்தத்தை நிகர்த்த மொழிச்சியர்
அஷ்டதிரசத்திகள் ஒத்த விழிச்சியர்

பொற்கடகக்கையில் அப்பி அடிக்கடி
கற்பக புஷ்பம் இறைத்திட இப்படி

போராடவே குயில்கள் நேர்பாடவே மயில்கள்
போலாடவே சுகவும் கோலாடவே மிகவும்

பூமகளும் பார்மகளும்
நாமகளு மேமகிழ

பூதாதிதரும் யோக வேதா உடனே லோக
மாதா எனும் வைபோக ஸீதாஸமேதனாக (மகு)

3. அஙகதன் அருகில் உடைவாள் பிடிக்க
ஸுக்ரீவன் கைலாகுதந்து தோள்பிடிக்க

அஞ்சி அனுமான் ஸாமிதாள் பிடிக்க
வந்து அடைப்பம் சுமந்து மத வேள்பிடிக்க

அட்சயவிவேகி எனும் லக்ஷ்மணன் சத்ருக்னன்
அருகில் நின்று கவரிகள் வீச

பட்சமுள்ள சுமந்திரன் எச்சரிக்கை என்று சொல்ல
பரதன் குடைபிடித்து நயம் பேச

அற்புதக் குபேரன் வந்து பொற்பணி திருத்தமணி
அணியணி கண்டு ஸூரியன் கூச

கற்பனை கடந்த ராமன் ஒப்பனை செய்திரு மார்பில்
களபச் சந்தனங்கள் சந்திரன் பூ

அருள்முக கமலமும் அதில் இரு கமலமும்
இருகர கமலமும் இருபத கமலமும்

அனமிசை வருகிற அயன்வரு கமலமும்
வனிதை ஜானகி திரு மலர்முக கமலமும்

அன்பூறும் பச்செசன ஸ்வரூபமும்
முன்காணும் கைப்ரசண்ட சாபமும்

அங்கே கண்கொண்டு கண்டபேர் இதை
இங்கே என் சொல்வோம் எனவே அதை

அந்தர துந்துபி தும்தும் தும்என
முந்திய சங்குகள் பம்பம் பம்என

அந்தைகள் பம்பைகள் திம் திம் திம்என
மொந்தை அதிர்ந்தது தொம் தொம் தொம்என

ஆதீாளி கொண்டுவிரி பாதாளமும் திசையும்
ஆலோல மண்டுகடல் போலே முழங்கியிட

அந்த லோகம் இந்த லோகம்
எந்த லோகமும் திரியும்

அனைத்துயிர்களும் ஒக்க மலர்க்கை குவித்து நிற்க
அதிஷ்டம் அயோத்தி தக்க வஷிஷ்ட முனிவன்
[வைக்க (மகுடா)

சீர்காழி அருணாசல கவிராயர்

ராம நாடகம்

7. உத்தர காண்டம்

வெள்ளியங் கிரியை மீதே வேரொடு மெடுத்த வீரக்
கள்ளவன் புயனு லைந்துங் கனகமா மவுலி பத்துந்
துள்ளியம் புவிமேல் வீழ வொருகணை தொடுத்து விட்ட
வள்ளலம் புயமே யன்ன மலரடி வணக்கஞ் செய்வாம்.

வினா 1.—இவ்வாறு கோலாஹலமாய்ப் பட்டாபிஷேகமான பின்பு என்ன நடந்தது?

விடை.—அகஸ்தியர் முதலிய அநேக ரிஷிகள் ராமரைக் கண்டு, அவர் செய்த கஷ்டமான துஷ்டநிக்கிரகத்திற்காக அவரை வாழ்த்தி ஆசீர்வதிப்பதற்காக வந்தார்கள்.

வினா 2.—இவர்கள் வந்து என்ன சொன்னார்கள்?

விடை.—மஹாரிஷிகளுள் சிரேஷ்டரான அகஸ்தியர், 'நீர் ராவணனை ஸம்ஹரித்ததே ஒருபெரிய காரியம். ஆனால், அவனது புத்திரனும், மஹா மாயாவியாயும், அநேக வரங்களைப் பெற்றவனுமுள்ள **இந்திரஜித்தை** வென்றது அதிக ஆச்சரியம். இந்த அரிய காரியத்தைச் செய்து முடித்ததற்காக நாங்கள் யாவரும் உம்மிடத்தில் நன்றியறிதலுடையவர்களா யிருக்கிறோம்' என்று சொன்னார்.

வினா 3.—அப்பொழுது ராமர் என்ன சொன்னார்?

விடை.—ஏன் இந்திரஜித்தை இவ்வளவு ஸ்தோத்திரம் செய்கிறீர்கள்? அவனது வல்லமை அவ்வளவு சிறந்ததா? ஆனால் அவனது சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறேன் என்றார்.

வினா 4.—அதற்கு அகஸ்தியர் என்ன பதில் சொன்னார்?

விடை.—ராவணனது கதை முழுவதுமே சொல்லுகிறேன். அப்பொழுது உமக்கு, நீர் செய்த ஸத்காரியத்தின் மஹத்துவம் விளங்கும் என்று ராவணனது கதையைச் சொல்லத் தொடங்கினார்.

வினா 5.—ராவணன் யாருடைய குமாரன்?

விடை.—பிரம்மாவினுடைய பேரனாகிய விச்ரவஸ் என்ற மஹரிஷியின் குமாரன்.

வினா 6.—இந்த விச்ரவஸ் யாருடைய குமாரர்? இவருக்கு வேறு பிள்ளைகளுண்டா?

விடை.—இவர் புலஸ்தியர் என்ற மஹரிஷியின் குமாரர். இவருக்குப் பரத்வாஜ மஹரிஷியின் குமாரியிடத்தில், வைசிரவணன் என்ற ஒரு குமாரன் பிறந்தான். அவன் தபஸு செய்து, வடக்கு திக்குக்கு அதிபதியானான். இவனுக்கே குபேரன் என்ற வேறொரு பெயரும் உண்டு.

வினா 7.—இவன் எங்கே அரசாண்டு வந்தான்?

விடை.—முன்புராக்ஷஸர்களால் ஆளப்பட்டு அப்பொழுதுகாலியாய் இருந்த தென் ஸமுத்திரத்திலுள்ள லங்கை என்ற தீவில், அரசாளும்படி விச்ரவஸ் அனுப்ப அங்கு அரசாண்டு வந்தான்.

வினா 8.—ராக்ஷஸர்கள் ஏன் ஓடிப்போனார்கள்?

விடை.—ராக்ஷஸ வம்சத்தில் மால்யவான், ஸுமாலி, மாலி என்று மூவர் உண்டாகி, தேவர்களை மிரம்பக் கஷ்டப்படுத்த அதை பொறுக்கமாட்டாமல், தேவர்கள் லங்கையை ஆளும்படி அஸுரர்களை அனுப்பினார்

கள். இவர்கள் சும்மாவிராமல் நல்ல காரியங்களைத் தடுப்பதும், ரிஷிகளைக் கொல்லுவதும், தேவர்களை வருத்தப்படுத்துவதும் ஆகிய கெட்ட காரியங்களைச் செய்து வந்தார்கள். இப்படி இருக்குங்கால், ஒரு ஸமயம் இந்திரனை ஜெயித்துவிடவேண்டுமென்று வர, அவன் வேண்டுகோளால், விஷ்ணுவானவர் ராக்ஷஸர்களில் அநேகமாய் எல்லோரையும் கொன்று மற்றவரை லங்கையைவிட்டுத் துரத்திவிட்டார். ஆகையால்தான் லங்கை அப்பொழுது காலியாய் இருந்தது.

வின 9.—குபேரன் தெற்கே இருந்து பிரதிதினம் எப்படி வடக்கே போய்க்கொண்டிருந்தான்?

விடை.—இவனுக்குத் திக்பாலனது பதவியைக் கொடுக்கும்பொழுதே, இவன் மனுஷ்யனாகையால் தேவருக்கு ஸமானமாய் இருப்பதற்காக, பிரம்மா இவனுக்குப் புஷ்பகம் என்கிற விமானத்தையும் கொடுத்தார். இது எஜமானனது எண்ணத்தின்படி எங்கும் போகும்படியான சக்தியை உடையது. அதனால் இவன் தனது திக்கில் அதிகாரம் ஸரியாகச் செலுத்திவந்தான்.

வின 10.—அவனிடத்தில் அக்காலத்தில் காணப்பட்ட நல்ல குணம் என்ன?

விடை.—இவன் வடக்கே போகும்பொழுதும், திரும்பி வரும்பொழுதும், தன் பிதாவாகிய விச்ரவஸினிடம் வந்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, அவரது ஆசிர்வாதத்தைப் பெற்றுப்போவது வழக்கம்.

வின 11.—இவ்வளவு நல்ல பிள்ளையை அடைந்த விச்ரவஸிற்கு ராவணன் எப்படி பிள்ளையாய்ப் பிறந்தான்?

வினு 40.—லங்கைக்குள் வந்ததும் என்ன விநோதத்தை ராவணன் கண்டான்?

விடை.—லங்கையில் தனது பிள்ளை, தம்பி விபீஷணன் முதலியவர்களையுங் காணுமல் ஆச்சர்யப்பட்டுத் தேட ஆரம்பித்தான். அப்பொழுது நிகும்பிலை என்னும் உத்தியான வனத்தில், சில முக்கிய யாகங்களைச் செய்துமுடித்து, கடைசி யாகத்தில் பாதி நடத்திக்கொண்டிருக்கும் தனது பிள்ளை மேகநாதனைக் கண்டான். அது முடிந்தால், அநேக மாயைகளும் பலன்களும் அவனுக்கு வந்திருக்கும்.

வினு 41.—அப்பொழுது ராவணன் என்ன செய்தான்?

விடை.—யாகத்தைக் கலைத்துத் தனது பிள்ளையைக் கூட்டிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். இந்த யாகத்தைத்தான், மறுபடி இந்திரஜித்தாகியமேகநாதன், யுத்தத்தில் பூர்த்தி செய்யத் தொடங்கினபொழுது லக்ஷ்மணரால் மரணமடைந்தான்.)

வினு 42.—மறுபடியும் ராவணன் சண்டைக்குப் புறப்படக் காரணம் என்ன?

விடை.—கடல் நடுவிலிருந்து அப்பொழுதுதான் தியானம் கலைந்துவந்த விபீஷணர், ராவணனை நோக்கி, தங்கையாகிய கும்பீநஸியை மதுவென்ற அஸுரன் எவரும் இல்லாத ஸமயம் பார்த்துக்கொண்டு போனதாகவும் அது, ராவணன் ஸ்திரீகளிடத்தில் செய்த அபராதத்திற்குத் தகுந்த தண்டனை என்றும், அந்த அழகான ஸ்திரீகளை உடனே விட்டுவிடவேண்டுமென்றும் புத்திமதி கூறினர். இந்தப் புத்திமதியைக் கவனியாமல், தனது பிள்ளை, கும்பகர்ணன், முதலிய



ஸீதை அஸ்வமேத மஹாமண்டபத்தில் தனது கற்பை நிலைநிறுத்தப் பூப்பிரவேசம் செய்தல்.



ராம பஞ்சாயதனம்

வர்களைக் கூட்டிக்கொண்டு சேனைகளோடு மதுவை வதம் செய்து, தேவர்களையும் உபத்திரவப்படுத்த மறுபடியும் புறப்பட்டான். விபீஷணர் தர்மாத்மாவானபடியால், லங்கையிலேயே நின்றுவிட்டார்.

வின 43.—மதுவை ராவணன் கொன்றானா?

விடை.—கொல்லவில்லை. அவனது தங்கை கும்பீநஸியின் வேண்டுகோளின்படி மதுவோடு ஸ்நேகம் செய்துகொண்டு, அவனையும் தன்னோடு கூட்டிக்கொண்டு வடக்கே போகும்பொழுது, குபேர பட்டணத்தின் அருகாமையில் ஸூர்யாஸ்தமனமாயிற்று. ராவணன் அங்கேயே இராத்திரி தங்கினான்.

வின 44.—இங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இங்கே ராவணனுக்கு, குபேரன் பிள்ளை நளகூபரனது சாபம் கிடைத்தது. பெண்களின் இஷ்டத்திற்கு விரோதமாய் ராவணன் அவர்களைக் கஷ்டப்படுத்தினால், அவன் தலைகள் ஏழு துண்டுகளாக வெடிக்கக் கடவன என்று நளகூபரன் சபித்தான்.

வின 45.—இப்படி நளகூபரன் சபிப்பானேன்?

விடை.—தன்னிடத்தில் ஆவலோடு வந்த ரம்பையை, ராவணன் கஷ்டப்படுத்தியதால், அவன் இச்சாபத்தைக் கொடுத்தான்.

வின 46.—ராவணன் அவ்வாறு நளகூபரன் சாபத்தை வாங்கிக்கொண்டு பின்பு என்ன செய்தான்?

விடை.—தனது ஸேனையோடு இந்திரலோகத்திற்குச்சென்று தேவேந்திரனை யுத்தத்திற்கு அழைத்தா[ன்].

வின 47.—அப்பொழுது இந்திரன் என்ன [செய்]தான்?

விடை.—முன் சொன்னபடி விஷ்ணுவால் துரத்தப்பட்டு ஒளிந்துகொண்ட ராக்ஷஸர்களில், ஸுமாலி என்பவன் தனது பெண்ணாகிய கேகஸிக்குப் பருவம் வந்தது கண்டு, 'நீ போய் விச்ரவஸ் என்ற மஹரிஷியைப் பர்த்தாவாக வரி. நமது கஷ்டகாலத்தில் உனக்குத் தகுந்தபடி விவாஹம் நம்மால் செய்யமுடியாது' என்றான். அப்பொழுது அவள் அஸுர முகூர்த்தத்தில் அந்த மஹரிஷியிடம் சென்று, தனது இச்சையைத் தெரிவித்தாள். நல்ல வேளையல்லவே என்று ரிஷி சொல்வதைக் கேட்காமல் கேகஸி பிடிவாதம் செய்ய, அப்பொழுது அவரது அநுக்கிரஹத்தால், அவளுக்குத் தசக்ரீவன் பத்துத் தலையோடு பிறந்தான்.

வினா 12.—ராவணன் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?

விடை.—கும்பகர்ணன், விபீஷணர், சூர்ப்பநகை என்ற பெண், ஆகிய மூவரே. இவர்களுள், விபீஷணர், நல்ல ஸமயத்தில் ரிஷி அநுக்ரஹத்தால் பிறந்தவராகையால் அவர் மஹாத்மாவானார்.

வினா 13.—ராவணன் முதலியவர்கள் தபசு செய்வதற்குக் காரணம் என்ன?

விடை.—தாயாரால் போஷிக்கப்பட்டு இவர்கள் வளர்ந்து வருங்காலத்தில், அங்கு தினம் வரும் வைசிரவணனையும் (குபேரனை) இவன் புஷ்பக விமானத்தையும் கண்டார்கள். உடனே கேகஸிக்குப் பொறாமை வர, தனது புத்திரர்களையும் போய்த் தவம் செய்து இம்மாதிரியான பெருமையை அடையுங்கள் என்று ஏவினாள். இவர்கள் பிரம்மாவை நோக்கித் தவம் செய்தார்கள்.

வினு 14.—இவர்கள் என்னென்ன வரங்களைக் கேட்டார்கள்?

விடை.—ராவணன் தனக்குத் தீர்க்கமாகிய ஆயுஸ் வேண்டுமென்றும், தான் எல்லோரையும்விட பலவானாய் இருக்கவேண்டுமென்றும், தனக்குத் தேவர்கள் முதலிய விசேஷ ஜாதியாராலும் கொடியமிருகங்களாலும் மரணம் ஸம்பவிக்கக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டான். ஆனுல் மனிதரும் குரங்குகளும், ராக்ஷஸருக்கு ஆகாரமாயிருந்ததால், அவர்களிடமிருந்து மரணம் வரக்கூடாதென்று கேட்கவில்லை. கும்பகர்ணன் நித்யத்வம் வேண்டுமென்று கேட்கப்போகும்போது, தேவர்களது வேண்டுகோளால், ஸரஸ்வதி அவன் நாவில் வந்திருந்து அதை நித்ரத்வம் என்று மாற்றிவிட்டாள். ஆகையால் அவன் தீர்க்க காலம் தூங்கும்படி நேரிட்டது. அப்பொழுது பிரம்மாவானவர், இவனிடம் இரங்கி ஆறு மாதத்திற்கொருதரம், விழித்துக்கொண்டு மறுபடி நித்திரை செய்யும்படி அநுக்ரஹித்தார். விபீஷணர் மஹாத்மாவானபடியால், இம்மாதிரியான வரங்களைக் கேட்கவில்லை. தனக்குத் தர்மத்திலேயே புத்தி செல்லவேண்டுமென்றும், பிறரது ஸஹாயத்தை அபேக்ஷிக்காமலே தனக்குப் பிரம்மஞானம் கிடைக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்.

வினு 15.—இதற்குப் பிற்பாடு நடந்த விஷயம் என்ன?

விடை.—இவ்வாறு இவர்கள் வரம் பெற்றதை ராக்ஷஸர்கள் அறிந்து, தாங்கள் மறைந்திருந்த இடங்களிலிருந்து வெளிவந்து, லங்கா நகரத்தைப் பிடித்து, அதில் ராஜ்யபாரம் நடத்திவரும்படி ராவணனை ஏவி

ஞர்கள். முதலில் தன் தமயனிடத்திலிருந்த நகரத்தை வாங்குவது பாபம் என்று அவனுக்குத் தோன்றிய நல்ல புத்தியை அவனது ஸகாக்களாகிய ராக்ஷஸர்கள் மாற்றிவிட, தசக்ரீவன் ராஜ்யத்தைத் தன்னிடம் விட்டுவிடும்படி தன் தமயனுக்குத் தூதன் மூலமாய்ச் சொல்லி அனுப்பினான்.

வினா 16.—அப்பொழுது குபேரன் என்னென்ன செய்தான்?

விடை.—அவன் தன் தம்பியையும் தன்னோடு லங்கையில் வந்திருக்கும்படி சொல்ல, அதற்குத் தசக்ரீவன் என் பட்டணத்தை விடுகிறாயா யுத்தம் செய்யபட்டுமா என்று கேட்க, தன் பிதாவாகிய விச்ரவஸினிடம் இதைக் குபேரன் தெரிவித்தான். அதற்கு அவர் தசக்ரீவன் துராத்மாவென்றும், அவன் இப்பொழுது வரத்தின் பலத்தால், மதத்தை அடைந்தவன் என்றும் சொல்லி, கைலாஸத்துக்குப் பக்கத்தில் அளகாபுரி என்ற ஒரு பட்டணம் செய்துகொண்டு, அங்கே இருக்கும் பரமசிவனுக்கு ஸ்நேகிதனாய் இரு என்று சொன்னார். குபேரனும பிதாவின் வாக்கியப்படி லங்கையைக் காலி செய்து விட்டுப் போனான்.

வினா 17.—இப்படி லங்கையை ராவணன் அடைவதில் விச்ரவஸுக்கு ஸம்மதமா?

விடை.—அவரிடத்தில் அநேகந்தரம் தசக்ரீவன் லங்கையைப்பற்றிச் சொல்ல, இப்படித் தமையனிடம் விரோதம் செய்யக்கூடாதென்று அவர் எவ்வளவோ புத்திமதி கூறினார். எப்படிச் சொல்லியும் கேட்காமல் பின்னும் தன்னைக் கஷ்டப்படுத்தியதால், அவனுக்கு ஒரு சாபம் கொடுத்தார். 'நீ உன் தமயனுக்கு விரோ

தம் செய்வாயானால், உனக்கு இந்த லங்கையிலேயே மரணம் ஸம்பவிக்கட்டும்' என்றார்.

வினு 18.—இப்படி லங்கையை அடைந்த பின்பு, தசக்ரீவன் என்ன செய்தான்?

விடை.—தனது தங்கையாகிய சூர்ப்பநகைக்கு வித்யுத்ஜிஹ்வன் என்ற காலகேயாதிபதியைப் பர்த்தாவாக ஸம்பாதித்தான். மயனது புத்திரியாகிய மண்டோதரியை தனக்கு ஸம்பாதித்துக்கொண்டான். மண்டோதரியிடத்தில இவனுக்கு மேகநாதன் என்ற ஒரு பிள்ளை பிறந்தான். அவன் பிறந்ததும், அழுத சப்தம் இடி-முழக்கம் போலிருந்ததினால் அவனுக்கு இப்பெயர் வந்தது. பிறகு கும்பகர்ண விபீஷணர்களுக்கும் விவாஹத்தை நடத்தினான். இப்படி எல்லாம் முடித்த பின்பு, ராக்ஷஸர்களைப் பரிபாலனம் செய்ய ஆரம்பித்தான்.

வினு 19.—அப்பொழுது என்ன துக்ககரமான விஷயம் நடந்தது? அதற்காக ராவணன் என்ன பரிகாரம் செய்தான்?

விடை.—கும்பகர்ணனுக்குப் பிரம்மாவின் வரத்தால் நல்ல தூக்கம் வந்து மூடிக்கொள்ள, அவன் நித்திரை செய்வதற்கு வேண்டிய இடத்தை ஏற்பாடு செய்து அவனைச் சுகமாய்த் தூங்கும்படி செய்தான். பின்பு இவனுக்குத் தேவர்களின்பேரில் அதிக கோபம் வந்துவிட்டது. இந்தத் தேவர்கள் அல்லவோ நமது தம்பியை இவ்வாறு படுக்கவைத்து விட்டார்கள் என்று எண்ணி துக்கித்து, கடைசியாய் அந்தத் தேவர்களுக்காக நடக்கும் காரியங்களைத் தடுத்து அவர்களைக் கஷ்டப்படுத்து

வது என்று தீர்மானித்தான். உடனே வெளியில் புறப்பட்டு, ரிஷிகளைக் கொல்வதும், யாகம் முதலிய ஸத்காரியங்களை நடக்கவொட்டாமல் அடிக்கிறதுமாகிய இது போன்ற கெட்ட தொழில்களைச் செய்யத் தொடங்கினான்.

வினா 20.—இவன் இப்படி ஆரம்பிப்பதைக் கண்டு இவனுக்கு யாராவது நல்ல புத்தி சொன்னார்களா?

விடை.—குபேரன் ஒரு தூதனை அனுப்பி, இவனுக்கு நல்ல புத்தி சொல்லும்படிச் செய்தான். முக்கியமாய் இம்மாதிரி தேவகாரியங்களுக்கு விரோதம் செய்யக்கூடாதென்றும், பரஸ்திரீகளைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கக்கூடாதென்றும், முன் ஒரு தரம் பார்வதியை இன்னாள் என்று அறியாது, கண்ணெடுத்து நோக்கியதனால், தனக்கு ஒரு கண் போய்விட்டதென்றும் சொல்லி யனுப்பினான்.

வினா 21.—இதைக் கேட்டவுடன் தசக்ரீவன் என்ன செய்தான்?

விடை.—தசக்ரீவனுக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே திக்விஜயம் பண்ணவேண்டும் என்றும், முதலில் குபேரனை அடிக்கவேண்டும் என்றும் துர்புத்தி வந்தது. உடனே சேனைகளைச் சேர்த்துக்கொண்டு அளகாபுரியை நோக்கிச் சென்றான்.

வினா 22.—குபேரனோடு நடந்த சண்டையின் முடிவென்ன?

விடை.—குபேரன் தோல்வி யடைந்தான். தசக்ரீ

வன் அவனது புஷ்பகவிமானத்தைப் பிடுங்கி, அதன்மேரில் ஏறிக்கொண்டு திக்விஜயத்திற்குப் புறப்பட்டான்.

வினா 23.—இப்படிப் புறப்பட்டதும், என்ன விக்கினமுண்டாயிற்று?

விடை.—எஜமானன் நினைத்த விடத்திற்கெல்லாம் போகும் புஷ்பகம, கைலாஸகிரிக்குச் சரியாய் மேலே வரும்பொழுது, திடீரென்று நின்றுவிட்டது. தசக்ரீவன் என்ன சொல்லியும், எவ்விதம் செய்தும் புஷ்பகம் அசையவில்லை. அப்பொழுது மஹாதேவருடைய உத்தம பக்தனும், ஸகாவுமான நந்திகேசுவரர், அங்கு தோன்றி 'எப்படிப்பட்டவர்களும் இந்த மலையைப் பிரதக்ஷிணம் செய்து போகவேண்டுமே ஒழிய இதற்கு மேலாகப் போகக்கூடாது. நீ அப்படிப்போக உத்தேசித்தபடியால் உன் விமானம் நின்றுவிட்டது' என்று தெரிவித்தார்.

வினா 24.—இப்படி நந்திகேசுவரர் சொன்னதைக் கேட்டுத் தசக்ரீவன் என்ன சொன்னான்?

விடை.—'என்ன, உன் முகத்தைப் பார்த்தால் குரங்குபோல் இருக்கிறதே' என்று அவன் பரிஹாஸம் செய்ய, நந்திகேசுவரர் 'உனக்குக் குரங்குகளால்மரணம் சம்பவிக்கட்டும்' என்று கொடுத்த சாபத்தைக் கேட்டு, கைலாஸ மலையை அங்கிருந்து எடுத்து எறிந்துவிடவேண்டுமென்கிற எண்ணத்தோடு, தசக்ரீவன் அந்த மலையை வேரோடு கையால் பெயர்த்துத் தூக்கினான்.

வினா 25.—தசக்ரீவன் மலையைப் பிடுங்கி எறிந்துவிட்டானா?

விடை.—அவன் அந்த மலையைத் தூக்கினதும், மஹா தேவர் விளையாட்டாக அதைக் கால் கட்டைவிரல் னால் அழுத்த, அது கீழே தாழ்ந்துவிட்டது. ராவணனுடைய கைகளும் அடியில் அகப்பட்டுக்கொண்டன. அப்பொழுது அவன் உலகமெல்லாம் நடுங்கும்படி ஒரு கூக்குரலிட்டான். ஆகலால் இவனுக்கு ராவணன் என்ற பெயர் ஸித்தித்தது.

வின 26.—ராவணன் இந்தக் கஷ்டத்திலிருந்து எப்படி விடுபட்டான்?

விடை.—அநேக காலம் சிவனைத் துதித்து ஸாம கானம் செய்ய மஹா தேவருக்கு சந்தோஷம் வந்தது. உடனே அவர் ராவணனைக் கஷ்டத்திலிருந்து விடுவித்தார்.

வின 27.—கைலாஸத்திலிருந்து புறப்பட்டுப்போகும் வழியில் என்ன விசேஷத்தைப் பார்த்தான்? அங்கே என்ன நடந்தது?

விடை.—யௌவனத்தோடு கூடிய ஒரு பெண் ஜடைதரித்து கிருஷ்ணாஜினம் உடுத்து இமயமலைச்சாரலில் தபஸு செய்வதை ராவணன் கண்டான். அவள் வேதவதி என்ற பெயருடையவள் என்பதாகவும், மகா விஷ்ணுவையே பர்த்தாவாக அடையத் தபஸு செய்வதாகவும் அவளாலேயே தெரிந்துகொண்டபோதிலும், ராவணன் அவளைக் கஷ்டப்படுத்துவதற்கு அவளது ஜடையைப் பிடித்தான். உடனே வேதவதி, தன் கையால் ஜடையின் மேல்பாகத்தை வெட்டிவிட்டாள். அப்பொழுது அவள், 'உன்னைக் கொல்வதற்கு நானே பெண்ணாக அவதரிக்கிறேன்' என்று சொல்லி அக்கினிப் பிரவேசம் செய்தாள்.

வினு 28.—பின்பு ராவணன் எங்கு சென்றான்?

விடை.—மருத் என்னும் அரசன் யாகம் செய்ய ஆரம்பிக்கும்பொழுது அவனிடம் சென்று யுத்தகளத்திற்கு வரவேண்டுமென்று கேட்க, 'நான் ஜெயிக்கப்பட்டேன்' என்று சொல்லி, அவன் ராவணனை அனுப்பி விட்டான்.

வினு 29.—பின்பு எந்த ராஜனை ராவணன் ஜெயித்தான்?

விடை.—அயோத்தியில அநரண்யர் என்ற அரசனோடு போர் செய்து, அவரைக் குத்துயிரோடு யுத்தகளத்தில் தள்ளி, அவருடைய கோபம் அதிகரிக்கும்படி பெருமை பேசினான். அப்பொழுது அவர் 'என் குலத்தில் பிறக்கும் அரசன் ஒருவன், இந்தக் கர்வம்தீர உன்னைக் கொல்லட்டும்'' என்று சாபம் கொடுத்தார்.

வினு 30.—இவரை ஜெயித்துவிட்டுப் போகும் வழியில் என்ன விசேஷம் நடந்தது?

விடை.—இப்படி ஸகலரையும் கஷ்டப்படுத்தும் ராவணனை நாரதர் ஸந்தித்தார். இப்படி அநியாயமாய் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களே, இவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்ற கருணையோடு ராவணனுக்கு ஒரு ஸமாசாரம் சொல்லி, அவனை உலகத்தைவிட்டு வேறிடம் போகும்படி செய்தார்.

வினு 31.—நாரதர் என்ன சொல்லி ராவணனை எங்கே போகும்படி செய்தார்?

விடை.—'அநியாயமாய் இந்தக் கேவலமான மனுஷ்யரை ஏன் கஷ்டப்படுத்துகிறாய். தாமே கொஞ்ச காலத்தில் இறக்கும் மானிடரை, நீ கொல்வது உன் பராக்கிரமத்திற்கு அழகன்று. யமதர்மராஜனுக்கு உன்

ளே இவர்கள் யாவரும் அடங்கினவர்கள். அவனை ஜெயித்தால், உலகத்தையே ஜயித்ததாகும். ஆகையால் நீ யம பட்டணம் போய் அவனை ஜெயித்துவா' என்று சொல்லி, நாரதர் ராவணனை யம பட்டணத்தை நோக்கிப் போகும்படி செய்து உலகத்தைக் காப்பாற்றினர்.

வினா 32.—யமனுக்கும் ராவணனுக்கும் நடந்த யுத்தத்தின் முடிவென்ன?

விடை.—இந்த யுத்தத்தில், ராவணன் மிகவும் கஷ்டத்தை யடைந்தான். கடைசியாக யமன் தனது காலதண்டத்தைப் போட்டு ராவணனை ஸம்ஹாரம் செய்ய எண்ணினபொழுது, பிரம்மாவின் வேண்டுகோளின்படி தனது ஸேனைகளோடு திடீரென்று யுத்தகளத்தில் மறைந்துவிட்டான். உடனே ராவணன் யமனை ஜெயித்ததாக நினைத்துப் புஷ்பகத்திலேறிக்கொண்டு போய்விட்டான்.

வினா 33.—யமபட்டணத்தை விட்டுப் போகும்பொழுது ராவணன் எவர்களை ஜெயித்தான்?

விடை.—அநேக ஸர்ப்பராஜர்களை ஜெயித்து நிவாதகவசர்களோடு கொஞ்சகாலம் போர்செய்து, பின்பு பிரம்மாவின் வேண்டுகோளின்படி அவர்களோடு ஸ்நேகம் செய்துகொண்டு, காலகேயர் என்ற அஸுரரை எதிர்த்து, அவர்கள் அரசனையும் தனது மைத்துனனையும் உள்ள வித்யுத்ஜிஹ்வனையும் யுத்த அவஸரத்தில் கொன்று, வருணனது பட்டணத்தை வருணன் இல்லாதபொழுது வசப்படுத்திக்கொண்டு லங்கையை நோக்கி ராவணன் புறப்பட்டான்.

வினா 34.—வரும் வழியில் நடந்த விசேஷம் என்ன?

விடை.—மஹாபலியின் பட்டணத்தைக் கண்டு, அவரால் தன்வாயிலிலிருக்கும் விஷ்ணுவினது பிரபாவத்தை அறிந்து, நல்ல புத்தி வராமல், யுத்தம் செய்யவேண்டுமென்று ராவணன் கேட்டான். அப்பொழுது பலி தன் பாட்டனுன ஹிரண்யகசிபுவினது கிரீடமும், குண்டலங்களும் முறையே மலைபோலவும், சக்கரங்கள்போலவும் கிடக்கின்றன என்று சொல்லி ராவணனை அவைகளை அசைக்கும்படி சொல்ல, ராவணன் முடியாமல் பக்கத்திலிருந்த குளத்தில் விழுந்தான். இப்படிக் கஷ்டப்பட்டும், பலியை யுத்தத்திற்கழைக்க, அவர் அவனை வாயிற்காப்பவரோடு யுத்தம் செய்துவா என்று அனுப்பினர். அப்பொழுது துர்புத்தியாகிய ராவணன் வருவதைக்கண்டு, வாயிற்காப்பவராகிய விஷ்ணு, பிரம்மாவின் வரம் வீணுகுமே என்று எண்ணி மறைந்துகொண்டார். உடனே ராவணன் ஜெயித்துவிட்டதாக அட்டஹாஸம் செய்துவிட்டு, புஷ்பகத்தில் ஏறிக்கொண்டு புறப்பட்டான். பின்பு ஸூர்யலோகம் சென்று அவரை ஜெயித்துவிட்டு பூமிக்கு வந்தான்.

வினு 35.—வரும் வழியில் ஏதாவது யுத்தம் நேர்ந்ததா?

விடை.—வழியில் அநேக விமானங்கள் ஸ்வர்க்கத்திற்குப்போவதைக்கண்டான். அங்கு அவஸரமாய் வந்த பர்வதர் என்ற ரிஷியின் மூலமாய் ஸ்வர்க்கம் போகிறவர்களுள் மாந்தாதா என்ற அரசன் தன்னேடு யுத்தம் செய்யத்தகுந்தவன் என்று தெரிந்து, யுத்தம் செய்யப்போக கடைசியாய் மாந்தாதா ராவணனைக் கொல்லும் தருணத்தில், புலஸ்தியர், காலவர் என்ற ரிஷிகளின் வேண்டுகோட் கிசைந்து அவனேடு ஸ்நேகம் செய்துகொண்டு ஸ்வர்க்கம் நோக்கிப்போனர்.

வினா 36.—பின்பு ராவணன் யாரை ஜெயித்தான்?

விடை.—சந்திரமண்டலம் சென்று சந்திரனை அடிக்க நினைக்கும்பொழுது, பிரம்மாவின் வார்த்தைக்காகத் திரும்பிவிட்டான். அப்பொழுது பிரம்மா சிவனது நூற்றெட்டு நாமங்களை இவனுக்கு உபதேசித்து, யுத்தகளத்தில் சத்துருவிரோதியாகிருக்கும்பொழுது மனம் அலையாது ஜெபித்தால் பலம் விருத்தியாகும் என்று சொல்லிப்போயினர்.

வினா 37.—இங்கிருந்து ராவணன் லங்கையை நோக்கிப் போம்பொழுது என்ன கெட்ட காரியங்கள் செய்தான்?

விடை.—அநேக அழகான கன்னிகைகளையும், குலஸ்திரீகளையும், இன்னும் அநேக பெண்களையும் பலாத்காரமாய்ப் பிடித்து விமானத்தில் வைத்துக்கொண்டு லங்கை நோக்கிச் செல்லும்பொழுது பதிவிரதா ஸ்திரீகள், ஸ்திரீவிஷயமாகவே உனக்குமரணம் வரட்டுமென்று சபித்தார்கள்.

வினா 38.—லங்கையின் அருகில் வரும்பொழுது என்ன அபசகுனமுண்டாயிற்று?

விடை.—லங்கைக்குப் போகும்பொழுது சூர்ப்பநகை தனக்கு வைதவ்யம் வந்ததென்று அழுதுகொண்டு எதிரே வந்தாள்.

வினா 39.—அவளை ராவணன் எவ்வாறு தேற்றினான்.

விடை.—அவளோடு கரன், தூஷணன் என்ற அஸுரத் தலைவர்களையும், பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும், புறப்படும்படி சொல்லி, தண்டகாரண்யத்தில் இருக்கும் ஜனஸ்தானத்தில் சுகமாய் இருக்கும்படி அனுப்பினான்.

விடை.—விஷ்ணுவினிடம் சென்று முறையிட, அதற்கு அவர், அப்பொழுது ராவணனைக் கொன்றால் பிரம்மா கொடுத்த வரத்திற்கு விரோதமாகும் என்று சொல்லித் தேவர்களை மாத்திரம் சண்டை செய்யும்படி சொல்லி அனுப்பினார்.

வினா 48.—அப்பொழுது தேவர்கள் செய்த யுத்தத்தில் நடந்த சில முக்கியமான விஷயங்கள் என்ன?

விடை.—கொஞ்ச நாழிகைக்கு எல்லாம் ஸாவித்ரன் என்ற வஸு, ஸுமாலியாகிய ராவணனது பாட்டனைக் கொன்றான். பின்பு இந்திரனது புத்திரனாகிய ஜயந்தன், ராவணனது பிள்ளையாகிய மேகநாதனை எதிர்த்து அவனால் தோல்வியடைய, இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜயந்தனது மாதாமகனாகிய புலோமா என்னும் அஸுரன், ஜயந்தனைத் தூக்கிக்கொண்டு ஸமுத்திர மத்தியில் போய் ஒளித்துக்கொண்டான். ஜயந்தன் இறந்தான் என்று எண்ணின தேவஸேனையைத் தைரியப்படுத்திக்கொண்டு, தேவேந்திரன் ராவணனை எதிர்த்தான், ராவணனை இந்திரன் தோல்வியடையச்செய்யும் தருணத்தில் மஹா மாயாவியான மேகநாதன் இந்திரனைத் தனது மாயையால் கட்டிப் பிடித்துக்கொண்டு போய்விட்டான். ஆதலால் இவனுக்கு இந்திரஜித் தென்ற பெயர் வந்தது.

வினா 49.—இந்திரனை எவ்வளவு காலம் ராக்ஷஸர்கள் சிறையிலிட்டு வைத்தார்கள்?

விடை.—இப்படிச் சிறைபிடித்த கொஞ்சநாழிகைக்கெல்லாம் பிரம்மா அங்குவந்து, இந்திரனை விடு
இந்திரஜித்தின் வேண்டுகோளிற்கிசைய, அவனு
ன் செய்துகொண்டிருந்த நிகும்பிலை யக்ஞத்

னதப் பூர்த்தி செய்தவுடன் அதிலிருந்துவரும் ரதத்தில் ஏறிக்கொண்டு சண்டை செய்ய ஆரம்பித்தால், அதன் பின் அவனை ஒருவராலும் கொல்லமுடியாமல் இருக்க வேண்டும் என்ற வரத்தைப் பிரம்மா அவனுக்குக் கொடுத்தார்.

வி௫ 50.—அதன் பின்பு ராவணன் என்ன செய்தான்?

விடை.—மாஹிஷ்மதி அரசனாகிய கார்த்தவீரியார்ஜுனனை ஜெயிக்கச் சென்றான். அவன் ஊரில் இல்லாததை அறிந்து, நர்மதைக்கரையை அடைந்து தனது ஸேனைகளை ஸ்நானம் செய்யச் சொல்லி, தான் தெய்வ பூஜையைச் செய்து முடித்தான்.

வி௫ 51.—அங்கு யாரை எவ்வாறு ராவணன் ஸந்தித்தான்? என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ராவணன் சிவபூஜை செய்துகொண்டிருக்கும்பொழுது, நர்மதையின் ஜலம் அதிகரிப்பதைக் கண்டான். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் ஜலமதிகரித்து அவன் ௨ சித்த புஷ்பங்களையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இதன் காரணத்தை அறிய, கரையோரமாய்க் கொஞ்சதூரம் செல்ல, அங்குக்கார்த்தவீரியார்ஜுனன் சில ஸ்திரீகளோடு ஜலக்கிரீடை செய்வதையும், அவனது ஆயிரம் கைகளால் நர்மதைக்குக் குறுக்கே அணையிட்டிருப்பதையும், ராவணன் கண்டான். அப்பொழுது அவனோடு ராவணன் சண்டைக்கு ஆரம்பித்தான்.

வி௫ 52.—இந்தச் சண்டை எப்படி முடிந்தது?

விடை.—அர்ஜுனன் ராவணனை மூர்ச்சை தப்பி விழும்படி அடித்து, அவனைப் பலத்த கயிறுகளால்

வரிந்துகட்டித் தூக்கிக்கொண்டு தனது நகரஞ் சென்றான்.

வினு 53.—ராவணன் எப்படிச் சிறை மீட்கப்பட்டான்? பின் நடந்த விஷயமென்ன?

விடை.—இப்படி ராவணன் அகப்பட்டுக்கொண்டான் என்று அறிந்த அவனது பாட்டனாகிய புலஸ்தியர், உடனே அர்ஜுனனிடத்தில் வந்து, ராவணனைக் கட்டவிழ்த்து விடும்படியும், அவனோடு அக்னி ஸாக்ஷியாய் ஸ்நேகம் செய்துகொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார். அவனும் அப்படியே செய்தான்.

வினு 54.—பின்பு ராவணன் என்ன செய்தான?

விடை.—இப்படி அவமானப்பட்டும் புத்திவராத ராவணன், மறுபடியும் திக்விஜயம் செய்துகொண்டு வரப் புறப்பட்டான். அப்படி வரும்பொழுது கிஷ்கிந்தா நகரம் வந்து சேர்ந்தான்.

வினு 55.—அங்கே ராவணன் யாரை யுத்தத்திற்கு அழைத்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை.—அந்தப்பட்டணத்தின் அரசனாகிய வாலியை அவன் சண்டைக்கழைத்தான். வாலி அப்பொழுது ஸந்தியாவந்தனம் செய்வதற்காகத் தெற்கு சமுத்திரத்திற்குப் போயிருக்கிறான் என்றும், கொஞ்சநாழிகையில் நான்கு திக்கு சமுத்திரங்களிலும் தனது அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பிவருவான் என்றும், ஆகையால் கொஞ்சம் காத்திருந்தால் வாலியோடு சண்டை செய்யலாம் என்றும், வாலி தம்பியாகிய ஸுக்ரீவன் ராவணனுக்குத் தெரிவித்தான். உடனே ராவணன் புஷ்பகத்திலேறிக்கொண்டு வாலியோடு சண்டை செய்யத் தெற்கு ஸமுத்திரத்தை நோக்கிச் சென்றான்.

வினு 56.—தெற்கு ஸமுத்திரத்தில் நடந்த ஆச்சரியமென்ன ?

விடை.—அங்கு ராவணன், வாலி கரையில் ஜெபம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு, அவன் பின்னால் அவன அறியாது சென்று, அவன் இடுப்பைக் கட்டிப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், தன் கைகளில் சிலவற்றை வாலியினது இடுப்பைச்சுற்றிப் போட்டான். உடனே வாலி, தனது கைகளால் ராவணனது கைகளைப் பலமாய் நசுக்கிப் பிடித்தான். ராவணனால் தனது கைகளை எடுத்துக்கொள்ள முடியவில்லை. இவ்விடத்தில் ராவணன இசைவாய் அகப்பட்டுக் கொண்டான்.

வினு 57.—பின்பு வாலி என்ன செய்தான் ?

விடை.—ராவணனை இம்மாதிரி நிலையிலேயே தூக்கிக்கொண்டு நான்கு திக்கு ஸமுத்திரங்களுக்கும் கொஞ்சங்கூட லக்ஷியம் செய்யாமல் போய், ஸந்தியா வந்தனம் முதலியவைகளை முடித்துக்கொண்டு, கிஷ்கிந்தை வந்து ராவணனைத் திடீரென்று ஒரு தோட்டத்தில் விழும்படி போட்டான்.

வினு 58.—பின்பு ராவணன் என்ன செய்தான் ?

விடை.—வாலியின் பலத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவனோடு ராவணன் அக்னிஸாக்ஷியாய் ஸ்நேகம் செய்துகொண்டான்.

வினு 59.—இவ்வளவு விசேஷங்களையும் கேட்ட பிறகு ராமர் அகஸ்தியரை என்ன கேட்டார் ?

விடை.—ஹநுமாரது பலம் வாலியின் பலத்தைவிட அதிகம் என்று கேட்டிருக்கிறேன். ஆனால், அவ

ருக்குத் தனது சக்தி தெரியாதாம்; அவரது சரித்திரத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டார்.

வின 60.—ஹநுமார் சரித்திர விசேஷம் என்ன?

விடை.—ஹநுமார் என்பவர், அஞ்சனை என்னும் கந்தருவப் பெண்ணினிடத்தில் வாயுவின் அநுக்கிரகத்தால் உண்டானவர். அவர் பிறந்த உடனே, அவர் தாய் அவரைக் காட்டில் விட்டுவிட்டு, ஆகாரம் தேடப்போய் விட்டாள். அப்பொழுது ஸூர்ய உதயகாலமாய் இருந்ததால், குழந்தைக்குப் பசி அதிகரித்து விட்டது. அப்பொழுது சிவந்த ஸூர்யனைக் கண்ட மாத்திரத்தில், குழந்தைக்குப் பழம்போலத் தோற்றியதால், உடனே ஹநுமார் ஸூர்யனைச் சாப்பிடவேண்டும் என்று கிளம்பி, ஸூர்ய மண்டலம் சென்று அவரைப் பிடிக்கப் போனார். ஸூர்யனுக்கு வந்த அபாயத்தைக் கண்ட தேவேந்திரன், அவரைத் தனது வஜ்ராயுதத்தால் ஒரு தாடையில் அடிக்க, அப்பொழுது அவர் அங்கிருந்து கீழே விழுந்தார். இந்திரன் அடித்த அடியால், ஒரு தாடை நீண்டது. கீழே வந்து ஒரு பாறையில் மற்றொரு தாடை யடிபட, அதுவும் நீண்டுவிட்டது. ஆகையால் இவருக்கு ஹநுமார் என்ற பெயர் வந்தது. விழுந்த வேகத்தால் மூர்ச்சித்துப்போக, இவரை வாயுவினது தாக்ஷண்யத்திற்காகத் தேவர்கள் எழுப்பினார்கள். பின்பு ஸூர்யனோடு ஓடிக்கொண்டே இவர் கல்வி பயின்றார். இவ்வளவு பராக்கிரமமுள்ளவர் ஆஞ்சனேயர்.

வின 61.—இவ்வளவு பலத்தையுடைய ஹநுமார்

ஏன் வாலியைக்கொன்று ஸுக்ரீவனுக்கு ஸஹாயம் செய்ய வில்லை?

விடை.—இவர் சிறுவயதாய் இருக்கும்பொழுது ரிஷீசுவரர்களைக் கொஞ்சம் தொந்திரவு செய்ய, அவர்கள், இவரது பலம் இவருக்குத் தெரியாமலே இருக்கட்டும், ஆனால் இவர் பிறந்த காலத்தில் நடந்த அதிசயங்களை யாராவது இவருக்கு எடுத்துச்சொன்னால், அப்பொழுது தன் பலம் ஞாபகம் வரட்டும் என்று சபித்தார்கள். ஆதலால் ஸுக்ரீவனை வாலி துரத்தும்பொழுது, தனது பலத்தை அறியாமல், தானும் ஸுக்ரீவனோடு ஓடத் தலைப்பட்டார். பின்பு ஸீதையைத் தேடப்போன காலத்தில், ஜாம்பவானால் துதிக்கப்பட்டுத் தனது பலம் ஞாபகத்திற்கு வர, ஸமுத்திரத்தை ஒரே தாண்டாகத் தாண்டினார்.

வினா 62.—ஹநுமாரைப்பற்றிச் சொன்ன பிறகு, ராமருக்கு அகஸ்தியர் யாரைப்பற்றி என்ன சொன்னார்?

விடை.—வாலி ஸுக்ரீவன் இவர்களது ஜனனத்தைப் பற்றிச் சொன்னார். பிரம்மா தபஸு செய்யுங்கால், அவரது நெற்றி வேர்வையிலிருந்து ரிக்ஷராஜஸ் என்ற ஒரு வானரம் பிறந்தது. இந்த வானரம் காட்டில் சென்று கனி முதலியவைகள் கொண்டுவந்து, பிரம்மாவிற்கு அர்ப்பணம் செய்து தான் உண்டு பிரம்மாவின் அருகில் இருந்தது. ஒரு நாள் இவ்வானரம் ஒரு குளக்கரைக்கு வந்தது. அந்தக் குளத்தில் யாராவது மூழ்கினால், அவர்கள் மிக அழகிய ஸ்திரீகளாகி, ஒரு நாள் முழுவதும் அப்படியே இருந்து, பின்பு தமது ஸ்வரூபத்தை அடைவது வழக்கம். இந்த வான

ரம் அக்குளக்கரையில் நின்றுகொண்டு, தனது நிழலைத் தண்ணீரில் பார்க்க, அதிககோபம் அடைந்து அதைப் பிடிக்கத் தண்ணீரில் மூழ்கிற்று. உடனே அது அழகிய பெண் ஆயிற்று. அத்தருணத்தில் வழியில் இந்திரனும், ஸூர்யனும் போய்க்கொண்டிருக்க, அவர்கள் இருவரும் இவ்வழகிய பெண்ணிற்கு இரண்டு பிள்ளைகள் உண்டாகும்படி அநுக்கிரஹித்தார்கள். அதில் இந்திரனால் உண்டாகிய மூத்தவன் **வாலி**. இவனுக்கு ஒரு பொற்றாமரை மாலையை இந்திரன் கொடுத்தான். ஸூர்யனால் உண்டானவன் ஸுக்ரீவன். மறுநாட்காலையில் வானரத்திற்கு ஸ்வயரூபம் வந்துவிட்டது. ஆகவே இந்த வானரமே வாலி ஸுக்ரீவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் ஆய்விட்டது. இவ்விருவர்களையும் கூட்டிக்கொண்டு பிரம்மாவின் சொற்படி கிஷ்கிந்தைக்குப் போய் இந்த வானரம் அரசு புரிந்து வந்தது.

வினா 63.—சீதையை ராவணன் எடுத்துப் போனதற்கு அகஸ்தியர் என்ன காரணம் கூறினார்?

விடை.—ராவணன் திக்விஜயம் செய்துகொண்டு போகுங்கால், பிரம்ம லோகத்தில் பிரம்மாவினது மானஸபுத்திரராகிய ஸநத்குமாரரைக் கண்டானும். அவரைப்பார்த்து ராவணன், யார் மனிதரில் சிறந்தவர், யாருக்கு எளிதில் மோக்ஷம் வரும் என்று கேட்க, அவர் ஹரிபக்தனே சிறந்தவன், அவனுக்கே மோக்ஷம் எளிதில் வரும். அப்படி இல்லாவிட்டால், ஹரித்துவேஷியாய் இருந்து அவரால் அடிபட்டு இறந்தாலும் அவனுக்கு மோக்ஷம் எளிதில் கிடைக்கும் என்றார். இதைக்

கேட்ட பின்பு, எப்படி ஹரியோடு சண்டை வரும்படி செய்வது என்று யோசித்துக் கடைசியாய் துவேஷம் உண்டாவதற்காக ராவணன் ஸீதையைத் தூக்கிக் கொண்டு போனான்.

வினா 64.—இம்மாதிரி சண்டை உண்டாவதற்காக ராவணன் என்ன பிரயத்தனம் செய்தான்?

விடை.—மறுபடியும் ராவணன் திக்விஜயத்துக்கு புறப்பட்டான். வழியில் நாரதரைக் கண்டு தன்னோடு யுத்தம் செய்ய வல்லவர் யார் என்று கேட்க, அவர் சுவேத த்வீபம் என்றொரு இடமுண்டு என்றும், அதில் சிறந்த ஹரிபக்தர்கள் இருக்கிறார்களென்றும், அவர்களை உலகத்தில் வெல்ல வல்லார் ஒருவருமில்லை என்றும் சொன்னார். இதைக்கேட்டவுடன், அந்தப் பக்தர்களிடம் ராவணன் சண்டைக்குப் போனான்.

வினா 65.—இந்த யுத்தம் என்னவாய் முடிந்தது?

விடை.—சுவேத த்வீபத்தின் அருகில் போகும் பொழுது, தாபம் பொறுக்க மாட்டாமல், ராக்ஷஸர்கள் யாவரும் போய்விட, ராவணன் மாத்திரம், அசையாது நின்று விட்ட புஷ்பகத்திலிருந்து இறங்கி, ஒருவருக்கும் தெரியாமல் தனிமையாய் உள்ளே புகுந்தான். அங்கே எல்லோரும் ஸ்திரீகளாய் இருக்கக்கண்டு, தனது வைபவங்களைச் சொல்லித் தான் சண்டைக்கு வந்திருக்கிறதாக அங்குள்ள புருஷர்களிடம் சொல்லும்படி பெண்களிடம் சொன்னான். அப்பொழுது அவர்களுள் ஒருத்தி, ராவணனை ஒரு பூச்சியைத் தூக்குவது போல் தூக்கி எறிய, மற்றொருத்தி அவனைத் தனது கையால் தட்ட, இப்படிப் பந்தடிப்பதுபோல் ராவ

ணனை ஸ்திரீகளே அங்கு மிங்கும் தட்டிவிட்டார்கள். கஷ்டம் பொறுக்க முடியாத ராவணன், ஸ்திரீகளே இவ்வளவு பலமுடையவர்களாயிருந்தால், இங்குப் புருஷர்கள் எப்படி இருக்கமாட்டார்கள் என்று எண்ணி, கர்வமடங்கி வெட்கி ஓடிப்போய்விட்டான். போனவன் திரும்பியும் அந்தத் தீவினுள் வந்து சுற்றிமுற்றும் பார்க்கையில், ஒரு குகையில் ஸநத்குமாரரைக் கண்டு அவரிடம் ஸன்மார்க்க வழிகளை அறிந்துகொண்டு பின்பு லங்கை வந்து சேர்ந்தான்.

வினா 66.—இவ்வாறு சொல்லி முடிந்ததும் அகஸ்தியர் என்ன செய்தார்?

விடை:—ராமரிடம் விடை பெற்றுக்கொண்டு தமது இருப்பிடம் சென்றார்.

வினா 67.—இதன் பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—ஸூர்யாஸ்தமனத்தைக் கண்டு ஸாயங்காலம் செய்யவேண்டிய கர்மங்களை எல்லாம் செய்து முடித்து, அன்று இரவை ஒருவாறு கழித்து, மறுநாள் காலையில் எழுந்து ஜனகர், கேகயராஜனாகிய யுதாஜித்து, காசிராஜன் முதலியவர்களுக்குத் தகுந்தபடி விடை கொடுத்தனுப்பி விட்டார். பின்பு ஸீதையை ராவணன் தூக்கிக்கொண்டு போய்விட்டான் என்ற செய்தியைக் கேள்வியுற்று, பரதரால் ராம ஸஹாயத்திற்காகச் சேர்க்கப்பட்ட அரசர்களையும் மிக விநயத்துடன் விடை கொடுத்தனுப்பினர். அதன் பின்பு ராமர் தனக்கு ஸஹாயம் செய்த வானரராஜனாகிய ஸுக்ரீவனைக் கூப்பிட்டு, ஹநுமாரையும், அங்கதனையும், மிகுந்த ஜாக்கிரதையாய் அவர்கள் மனங்கோணாது பாது

காத்து வரவேண்டும் என்று சொல்லி, அவரவர்களுக்குத் தகுந்த வெகுமானம் செய்து விடை கொடுத்தனுப்பினர். இதுபோலவே விபீஷணரையும் இலங்கைக்கு அனுப்பினர்.

வினா 68.—இப்படி ராமர் ஸகலருக்கும் விடை கொடுத்தனுப்பிய பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ராமர் அயோத்திக்குவந்த உடனே குபேரனிடம் அனுப்பிய புஷ்பகம் திரும்பியும் ராமரிடம் வந்துவிட்டது. உடனே ராமர் புஷ்பகத்தின் தேவதைக்குத் தகுந்த உபசாரம் செய்து, தான் நினைக்கும்பொழுது தன்னிடம் வரவேண்டுமென்று சொல்லி, திரும்பவும் குபேரனிடம் அனுப்பிவித்தார்.

வினா 69.—ராமரும் ஸீதையும் எவ்வாறு இருந்தார்கள்?

விடை.—தாங்கள் இத்தனை நாள் பட்ட கஷ்டங்களிலிருந்து நிவர்த்தியாகி, அழகிய உத்தியான வனங்களில், உல்லாஸமாயும் ஸுகமாயும் விளையாடிச் சில காலம் கழித்துவந்தார்கள். இப்படி இருக்கும்பொழுது கூட ராமர், தான் செய்யவேண்டிய தர்மங்களைத் தவறாது செய்துவந்தார். இவ்வாறு சில வருஷங்கள் சென்ற பிறகு சீதை கர்ப்பம் தரித்தாள்.

வினா 70.—அக்காலத்தில் ஸீதை மனதில் என்ன விருப்பம் இருந்தது?

விடை.—கங்கைக் கரையிலுள்ள ரிஷிகளையும், ரிஷி பத்தினிகளையும் கண்டு வணங்கி, ஒரு நாளாவது அப்பரிசுத்தமான ஜனங்களோடு இருந்து, தான் கிருதார்த்தமாகவேண்டும் என்ற விருப்பமிருந்தது. இதை இவள் ராமருக்குத் தெரிவித்தாள்.

வின 71.—அந்த ஸமயத்தில் என்ன விபரீதம் ஸம்பவித்தது?

விடை.—அதைக் கேட்டுவிட்டு, ராமர் ஸபைக்குப் போனதும் அங்கே பத்ரன் என்ற தூதன் வந்து, ஸகல ஜனங்களும் ராமரைப் புகழ்ந்து பேசினதாகச் சொன்னான். அப்பொழுது ராமர், தன்னைப்பற்றி ஒருவரும் இகழ்ந்து கூறவில்லையா என்று கேட்டு, உண்மையை ஒளிக்காது சொல்ல வேண்டுமென்று கட்டளையிட்டார். உடனே தூதன், ராவணன் வீட்டில் சிலகாலம் தனியாய் வாஸஞ்செய்த ஸீதையை, ராமர் தன்னோடு சேர்த்துக்கொண்டாரே, அதனால் தங்கள் பெண்சாதிகளை இனிமேல் வைத்து அடக்கி ஆளுவது அஸாத்யம் என்று அநேக ஜனங்கள் துக்கித்து, உம்மைப் பழிக்கிறார்கள் என்றான். உடனே அந்த அபவாதத்தை நீக்குவதற்காக ஸீதையைப் பரித்தியாகம் செய்துவிடவேண்டும் என்று ராமர் தீர்மானித்தார்.

வின 72.—அப்படி ராமர் செய்தது நியாயமா?

விடை.—ராமர் ஸகலருக்கும் அதிபதியாகையால் அவரிடத்தில் ஒரு அபவாதத்துக்கும் இடமில்லாமல் இருக்கும்படி அவர்பார்த்துக்கொள்ள வேண்டியது அவருடைய தர்மமே. பெரியோர்கள் எவ்வாறு நடக்கிறார்களோ, அவ்வாறே சிறியோரும் பின் தொடருவார்கள். மேலும் பெரியோர் ஒருபிழை செய்வாராயின், மற்றவர்கள் அதை உடனே பின்பற்றிப் பெரிய பிழைகளைத் தவறாமல் செய்வார்கள். ஆகையால், ராமரைப்போன்றவர், தன்னிடத்தில் அபவாதத்திற்குக் காரணமான

விஷயத்தை வைத்துக் கொண்டிருந்தால், ஸாதாரண ஜனங்கள், அவரைப்போல் நடந்து சீக்கிரம் கெட்டுப் போவார்கள். அவர்களைக் கெடுத்த பாவம் ராமரைச் சேரும். ஆதலால், தனது உயிரைவிட அதிகப் பிரிய மான ஸீதையை, ராமர் தர்ம சிந்தையோடு, திடமாய்த் தியாகம் செய்தது சிறந்த விஷயமே ஒழிய அநியாய மன்று. நாமும் மேலான தர்மம் வருங்கால், தாழ்ந்த தர்மங்களையும் இவ்வாறே தீரமாய்த் தியாகம் செய்வது நலம். மேலும், இதனால் லோகோபகாரம் செய்யும் மஹான்களுக்குக் கஷ்டம் எவ்வளவிருக்கின்றதென்பதும் வெளியாகிறது.

வினு 73.—ஸீதையைத் தியாகம் செய்வதற்கு ராமர் என்ன உபாயம் செய்தார்?

விடை.—லக்ஷ்மணரைக் கூப்பிட்டு, ஸீதையைக் கங்கைக்கரைக்குக் கொண்டுபோய் அங்கே ரிஷியாசிர மங்களின் ஸமீபத்தில் விட்டுத் திரும்பி வரும்படி கட்டளையிட்டார். ஸீதை இதற்கு இசைந்து வருவாளா என்று லக்ஷ்மணர் கேட்க, அதற்கு ராமர், ஸீதை ரிஷி யாச்ரமங்களைப் பார்க்க விரும்பினுள் என்றும், நீ ரதத்தைக் கொண்டுபோய் நிறுத்தி ஸீதையைக் கூப் பிட்டால், அவள் உடனே வருவாள் என்றும், அப் பொழுது கங்கையைத் தாண்டிக்கொண்டுபோய் வால் மீகி ரிஷி ஆசிரமத்திற்கு அருகில் விட்டுவிட்டு வரலாம் என்றும் ராமர் தந்திரம் சொல்லிக்கொடுத்தார்.

வினு 74.—ஸீதையை லக்ஷ்மணர் கொண்டுபோய் விடும்பொழுது என்னென்ன நடந்தது?

விடை.—கங்கைக்குப் போகும் வழியில் ஸீதை

அநேக அபசகுனங்களைக்கண்டு, லக்ஷ்மணரை இதற்குக் காரணம் என்னவென்று கேட்டாள். அப்பொழுது லக்ஷ்மணருக்கு அடங்காத் துக்கம் வந்தபோதிலும், உண்மையை வெளியிடவில்லை. கடைசியாய்க் கங்கையைக்கடந்து, அக்கரைசென்று ஸீதை இறங்கினபின்பு லக்ஷ்மணர் ஸீதையிடத்தில் உண்மையைத் தெரிவித்து வால்மீகி ரிஷி யாச்ரமத்தின் சமீபத்தில் விட்டுவிட்டு, கங்கையைக் கடந்துவந்து, ஸுமந்திரர் என்ற மந்திரியால் ஓட்டப்பட்டு வந்த ரதத்தில் ஏறிக்கொண்டு, மிகுந்த துக்கத்தோடு ஸீதையைப் பிரிந்து அயோத்தியை நோக்கிச் சென்றார்.

வின 75.—இப்படித்தனிமையாய் விட்டுப்போன ஸீதையின் கதி என்னவாயிற்று ?

விடை.—லக்ஷ்மணர் போனதும், முன்னமேயே ஒருமாதிரியாயிருந்து துக்கம் அதிகரிக்க, ஸீதை கீழே விழுந்து புரண்டு அழ ஆரம்பித்தாள். அப்பொழுது அங்கு காரியார்த்தமாய் வந்த ரிஷி குமாரர்கள் இதைக் கண்டு, தமது குருவாகிய வால்மீகியினிடம் சொல்ல, அவர் உடனே வந்து ஸீதையைக் கண்டு, தனது ஆசிரமத்திற்கு அழைத்துப்போய் அவளை ஸுகமாய்ப் பாதுகாத்து வந்தார். இப்படி ராமரால் தர்மார்த்தமாய்த் தியாகம் செய்யப்பட்ட பதிவிரதா சிரோமணி என்று அறிந்து, ரிஷி பத்னிகளும் குமாரர்களும் மிக்க கௌரவமாய் வைத்துப் போஷித்து வந்தார்கள். ஸீதையும் கணவனது உண்மை எண்ணத்தை அறிந்தவளாய், தனது பிராண நாயகரான ராமரை ஸதா தியானம் செய்து காலங்கழித்து வந்தாள்.

வினு 76.—அயோத்தியை நோக்கிச் சென்ற லக்ஷ்மணர் துக்கம் எவ்வாறு தெளிந்தது?

விடை.—போகும் வழியில் மஹா புத்திமானுன ஸுமந்திரர், இவ்வாறு நடக்கப்போகிற தென்றும், இன்னும் ராமர், உம்மையும், பரதசத்துருக்கினர்களையும், தர்ம விஷயத்தில் பரித்தியாகம் செய்யப்போகிறார் என்று சொல்லி, விதியை வெல்ல எவரால் முடியும் என்று தேற்ற, லக்ஷ்மணர் தேறுதலடைந்தார்.

வினு 77.—இப்படி நடக்கப்போகிற தென்பது ஸுமந்திரருக்கு எப்படித் தெரியும்?

விடை.—முன்னொரு காலத்தில், தசரதர் வஸிஷ்டாசிரமத்திற்குப் போயிருந்தார். அங்கே துர்வாஸரிருக்கக் கண்டு, அவரைத் தனது பிள்ளை ராமன் எவ்வளவு நாள் உலகத்திலிருப்பான், என்னென்ன விசேஷங்கள் அப்பொழுது நடக்கும் என்று கேட்டார். அதற்கு அவர், ராமர் தசரதருக்குப்பின் அநேகமாயிரம் வருஷம் ராஜபாரம் வகிப்பாரென்றும், அப்பொழுது ஸீதையையும், தனது தம்பிகளையும் ஒரு தர்ம விஷயத்தில் பரித்தியாகம் செய்து, கடைசியில் பரமபதமடைவார் என்றும், துர்வாஸர் சொல்லுங்கால், ஸுமந்திரரும் கூடவிருந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

வினு 78.—பரமாத்மாவாகிய விஷ்ணுவுக்கு, இம்மாதிரி தமது பத்னி, தம்பிமார் இவர்களைப் பிரிந்து துக்க மனுபவிக்கும்படி வருவானேன்?

விடை.—முன்காலத்தில் நடந்த தேவாஸுர யுத்தத்தில், அஸுரர்கள் தோல்வியடைந்து, பிருகுவின்து பத்னியிடம் சரணம் என்று வந்துவிழ, அவளால்

பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். அப்படிப் பாதுகாக்கப்பட்ட அஸுரர்களை, தேவர்களால் அடிக்க முடியவில்லை. இப்படி அஸுரர்கள் நிர்ப்பயமாய் இருப்பதைக்கண்டு, மஹாவிஷ்ணு தேவர்களுக்கு ஸகாயம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தால், அஸுரரிடம் கோபம் அடைந்து, பிருகு பத்னியின் கழுத்தைத் தன் சக்கரத்தால் அறுத்துவிட்டார். பிருகு, அதிக கோபம் அடைந்து, நீயும் பத்னிவியோகத்தால் கஷ்டப்படக் கடவது என்று சபித்து, கோபம் அடங்கிய பின்பு, தான் செய்த பகவதபராதத்திற்காக மனம் நொந்து மஹா விஷ்ணுவைத் துதிக்க, அவர் இந்தச் சாபத்தை லோகானுக்கிரகத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறேன் என்றார். ஆதலால் ராமருக்கு இக்கஷ்டம் வந்தது.

வினு 79.—அயோத்தியை யடைந்த பின்பு, லக்ஷ்மணர் ராமரோடு என்ன சொன்னார்? ராமர் என்ன பதில் சொன்னார்?

விடை.—ராமர் துக்கித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, அநேகவிதமான நீதிகளை லக்ஷ்மணர் எடுத்துச் சொல்லி அவரைத் தேற்றினார். ராமருக்கு உடனே துக்கம் நீங்க, ராஜ்ய காரியங்களைக் கொஞ்சநாள் பாராமல் விட்டதால் மனம் நொந்து, லக்ஷ்மணரைத் துவார ஸிம்ஹத்தில் யாராவது பிரஜைகள் வந்திருக்கிறார்களா என்று பார்த்து வரச்சொன்னார்.

வினு 80.—லக்ஷ்மணர் அப்பொழுது என்ன செய்தார்?

விடை.—அன்று ஸாயங்காலமானது கண்டு, இனி ஒன்றை நம்மால் விசாரிக்க முடியும் என்று எண்ணி,

சில கேள்விகள் கேட்டார். ராஜாக்கள் கொஞ்ச நாள் ராஜ்யத்தைக் கவனியாதிருந்தால் என்ன கேடு வருமென்றுங் கேட்டார்.

வின 81.—அதற்கு ராமர் என்ன பதில் சொன்னார்?

விடை.—நிருகன் என்னும் அரசன், ராஜ்யமாளும் காலத்தில், ஒரு தடவை பிராம்மணர்களுக்கு அநேக பசுக்களைத் தானம் கொடுத்தான் என்றும், அவற்றில் ஒரு பசு வந்து அரசன் மந்தையில் சேர, அப்பசுவையே வேறொருவருக்குத் தானம் செய்தான் என்றும், அந்தப் பசுவின் சொந்தக்காரர் இருவருக்கும் இந்த விஷயத்தில் கலகம் உண்டாக அரசன் ஸபைக்குவந்து அநேக நாள் காத்திருந்தார்கள் என்றும், அரசன் கவனியாதிருந்தமையால், அவர்கள், அரசன் பச்சை ஓணாய்ப் போகட்டுமென்று சபித்தார்கள் என்றும் சொல்லி, அரசர்கள் கொஞ்ச நாழிகையேனும் அஜாக்ரதையாயிருப்பின், அவர்களுக்குக்கேடுவரும் என்று நன்கு விளக்கினார்.

வின 82.—குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை விதிக்காமல், பிராம்மணர்கள், ஏன் இவ்வளவு கொடிய தண்டனையை விதித்தார்கள் என்று லக்ஷ்மணர் கேட்ட கேள்விக்கு, ராமர் என்ன பதில் சொன்னார்?

விடை.—இதைக் கொடியதென்று சொல்லக்கூடாதெனச் சொல்லி, நிமியின் கதையைச் சொன்னார். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த நிமி, முதலில் வஸிஷ்டரைத் தான் செய்யும் யாகத்திற்கு ஆசாரியராக அழைத்தார் என்றும், அவர் இந்திரனுக்கு யாகம் செய்து

விடை.—உடனே பிராம்மணனை அழைத்து விசாரித்தார். தனக்கு ஒன்றும் அகப்படாமல், நடு மத்தியானம் வரையில் அலைந்து பசியால் வருந்தி இருக்கும் பொழுது, இந்த நாய் உத்ஸாஹமாய் இருப்பதைக் கண்டு, மனம் பொறுமல் அடித்து விட்டதாகவும், செய்தது பிழை என்பதாகவும் ஒப்புக்கொண்டான். ராமரும், ஸபையிலிருந்தோரும், பிராம்மணனுக்குத் தண்டனை விதிக்க முடியாமல் தத்தளித்தார்கள்.

வினு 89.—அப்பொழுது பிராம்மணனுக்கு யார் என்ன தண்டனையை விதித்தார்கள்?

விடை.—இப்படித் தத்தளிக்கும் நாய் ஸபையாரை நோக்கி இந்தப் பிராம்மணனுக்குக் கோயில் மணியம் (கௌலபத்தியம்) கொடுங்கள். அதுதான் இவனுக்குத் தகுந்த தண்டனை என்றது.

வினு 90.—ஸபையோர் ஆச்சரியப்பட்டு, இது எப்படித் தண்டனையாகும் என்று கேட்டதற்கு, நாய் சொன்னது என்ன?

விடை.—தான் முன் ஜன்மத்தில், ஒரு கோயில் மணியக்காரனாய் இருந்ததாகவும், அப்பொழுது தனக்கு ஏற்பட்ட பாபத்தினால் இந்த ஜன்மம் வந்ததென்றும், இந்த முன்கோபியாகிய பிராம்மணனுக்கு இந்தமணியக்கார வேலை தண்டனையே ஒழிய வேறில்லை என்றும் நாய் எடுத்துச் சொல்லிற்று. இதன் பின் நாய் கங்கைக் கரையை யடைந்து, பிராயோபவேசம் செய்து தனது தேகத்தை நழுவ விட்டது.

வினு 91.—இதன் பின்பு வழக்குத் தீர்க்க வேண்டியதற்காக யார் ராமரிடம் வந்தது?

விடை.—ஒரு ஆந்தையும் கழுகும், ராமரிடம் தாம் குடியிருக்கும் கூட்டைப்பற்றிச் சண்டையிட்டுக் கொண்டு வந்தன. ஆந்தையினது கூட்டில், கழுகுபலாத்காரமாய்ப் புகுந்துகொண்டு, வீடு தன்னுடையது என்று அநியாயச் சண்டையிட, ஆந்தை இந்த வழக்கைத் தீர்க்கும்படி ராமரிடம் கழுகைக் கூட்டிக்கொண்டு வந்தது.

வி௫ 92.—ராமரிடம் வந்ததும் என்ன நடந்தது? அந்த ஸபையோர் இவ்வழக்கை எவ்வாறு தீர்த்தார்கள்?

விடை.—கழுகு, கூடு தன்னுடையதென்றும், பூமியில் மனுஷ்யர் சிருஷ்டிக்கப்பட்ட காலத்தில், தான் அக்கூட்டைக் கட்டிக்கொண்டதாகவும், ஆந்தை தன்னோடு அநீதியான வழக்குப் பேசுவதாகவும் முதலில் விண்ணப்பம் செய்துகொண்டது. பின்பு ஆந்தை, கூடு தன்னுடையது என்றும், தான் உலகில் விருக்ஷங்கள் உண்டான காலத்தில் அக்கூடு கட்டிக்கொண்டதாகவும், கழுகு தனது புஜபலத்தால் தன் கூட்டை அபகரித்ததாகவும் முறையிட்டது. ஆந்தை ஸந்தோஷகரமாய் இருப்பதையும், கழுகு துக்ககரமாய் இருப்பதையும் கண்ட ஸபையோர்கள், கூடு கழுகினதாயிருக்க வேண்டும், ஆந்தை தான் அநியாயமாய்க் கூட்டை அபகரித்திருக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

வி௫ 93.—ராமர் இந்த வழக்கை எப்படித் தீர்த்தார்?

விடை.—ஆதியில் பிரம்மதேவர் ஸ்ரீமந் நாராயணரது நாபீ கமலத்தில் உத்பவித்து, மனிதர் முதலிய சிருஷ்டிகளைச் செய்ய, கொஞ்ச காலத்தில் ஸ்ரீமந் நாராயணரது காதிலிருந்து மதுகைடபர்கள் என்ற அஸுரர்கள்

உண்டாகி பிரம்மாவை விழுங்கப்போனார்கள். அப்பொழுது பிரம்மாவைக் காப்பாற்றுவதாக மகாவிஷ்ணு இவ்வஸுரர்களைக் கொல்ல, அவர்களது இறைச்சி முதலியன பூமியெங்கும் பரவி, பிரம்ம சிருஷ்டியை யழித்து விட்டன. அதன் பின்பு, முதலில் விருக்ஷ வர்க்கங்கள் தான் உண்டாயின. ஆதலால், கூடு ஆந்தை சொல்லியபடி அதனுடையதாய்த் தான் இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, கழுகை ராமர் தண்டிக்க ஆரம்பித்தார்.

வி 94.—இப்படித் தண்டிக்கவேண்டும் என்று எண்ணிய ராமர் கடைசியில் கழுகிற்கு என்ன செய்தார்?

விடை.—கழுகை, ராமர் தனது கையால் தடவிக் கொடுக்க அது உடனே ஒரு திவ்ய ரூபத்தை யடைந்து ஸ்வர்க்கம் சென்றது.

வி 95.—தண்டிக்காமல் ராமர் ஏன் இப்படிச் செய்தார்?

விடை.—அவர் தண்டனையைப்பற்றி யோசிக்குங்கால் ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. இந்தக் கழுகு பூர்வ ஜன்மத்தில் பிரம்மதத்தன் என்ற அரசனாய் இருந்தது என்றும், அவன் ஒரு காலத்தில் கௌதம ரிஷியை வைத்துப் போஷித்து வருகையில், பரிசாரகரது அஜாக்ரதையால் ரிஷிக்கிட்ட போஜனத்தில் மாம்ஸம் கலந்திருக்க, உடனே ரிஷி கழுகாகக் கடவாய் என்று சபித்து ராமரது கரஸ்பரிசத்தால் அச்சாபம் தீரும் என்று சொன்னார் என்றும் அசரீரி சொல்ல ராமர் இவ்வாறு செய்து அரசனைச் சாபத்தினின்றும் விடுவித்தார். ஆந்தையும் தன் இடம் சேர்ந்து ஸுகமாயிருந்தது.

வினு 96.—கழுகிற்கும் ஆந்தைக்கும் இருந்த விவாதத்தைத் தீர்த்த பின்பு, ராமர் ஸபைக்கு, யார் என்ன காரியார்த்தமாக வந்தார்கள்?

விடை.—சியவனர் முதலிய மஹரிஷிகள் 'யமுனா தீரத்திலிருந்து தாங்கள் படும் கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ள வந்தார்கள். தங்கள இருப்பிடத்தின் அருகில் மதுரை என்று ஒரு பட்டணம் இருப்பதாகவும், அதில் மதுவென்ற மஹா தாமாத்மாவான அஸுரனது புத்திரனாகிய லவணாஸுரன் அரசாளுவதாகவும், அவன் தங்களை மிகவும் உபத்திரவப் படுத்துவதாகவும் முறையிட்டார்கள்.

வினு 97.—இம்மஹரிஷிகளை இவ்வளவு தைரியமாய்க் கஷ்டப்படுத்தும்படியான சக்தி லவணனிடத்தில் என்ன இருந்தது?

விடை.—லவணனது பிதாவாகிய மது, மஹாதேவரைக் குறித்துத் தபஸு செய்ய, அவர் ஒரு சூலாயுதத்தைக் கொடுத்தார். அப்பொழுது அந்த ஆயுதம் தனது பரம்பரையில் எல்லோரிடத்திலும் இருக்க வேண்டுமென்று மது கேட்க, மஹாதேவர் உனது பிள்ளையின் காலம் வரையில் தான் உனது பரம்பரையில் இருக்கும். அதைக் கையில் வைத்திருக்கும் பொழுது உங்களை எவராலும் ஜயிக்க முடியாதென்று சொன்னார். இக்கொடிய ஆயுதமிருந்ததினால் தான் லவணனை ஒருவராலும் கொல்லமுடியவில்லை. அவன் மிகத் துணிவோடு எல்லோரையும் வருத்தி வந்தான்.

வினு 98.—இம்மாதிரியாய் ரிஷீஸ்வரர்கள் சொல்லவும், ராமர் என்ன ஏற்பாடு செய்தார்?

விடை.—முடிவில், ராமர் பரதரைநோக்கி, 'லவணு ஸுரனை நீ கொன்றுவிட்டு வருகிறாயா' என்று கேட்க, அப்பொழுது சத்துருக்னர் எழுந்து, தான் இது வரையிலும் ஒரு விசேஷ காரியங்களையும் செய்ததில்லை என்றும், ஆதலால் தன்னை அந்த லவணுஸுரனைக் கொல்லும்படி அனுப்பவேண்டுமென்றும் சொன்னார். இதைக் கேட்டதும், ராமர் அப்பொழுதே லவணனது ராஜ்யத்தைச் சத்துருக்னருக்குக் கொடுத்துப் பட்டாபிஷேகம் செய்து லவணனைக் கொன்றுவிட்டு அவன் பட்டணத்தில் அரசாளும்படி சத்துருக்னருக்கு உத்தரவு செய்தார்.

வினு 99.—சத்துருக்னர் உடனே புறப்பட்டு விட்டாரா? அவர் புறப்படும்பொழுது ராமர் என்ன புத்திமதிகள் சொல்லி யனுப்பினுர்?

விடை.—லவணனது சூலத்தின் மஹத்துவத்தை எடுத்துரைத்து, அவன் தனது பட்டணம் விட்டு வெளியே இரைதேடப் போயிருக்கும் தருணத்தில் தனிமையாய்ச்சென்று, அவனது தலைவாயிலிலிருந்து அவன் வரும்பொழுது அவனோடு யுத்தம் செய்யவேண்டும் என்றும், அப்படிச் சண்டை செய்யும்பொழுது அவனைச் சூலமெடுக்க இடங்கொடுக்கக் கூடாதென்றும் சொல்லி, மஹா கொடிய நாராயணுஸ்திரத்தைச் சத்துருக்னருக்கு ராமர் கொடுத்தார். லவணனை மழைகாலத்தில் தான் கொல்ல முடியுமென்று சொல்லி, சத்துருக்னரைக் கொஞ்சகாலம் அயோத்தியிலிருந்து, பின்பு ஸகல பரிவாரங்களோடும் போகும்படி உத்த

ரவு செய்தார். ரிஷிகளும் தத்தம் இருப்பிடஞ் சென்ருர்கள்.

வினு 100.—போகும் வழியில் சத்துருக்னர் எங்கே தங்கினுர்? அங்கு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—கங்கையைத் தாண்டினதும், வால்மீகாசிரமத்தில் சத்துருக்னர் ஓர் இராத்திரி தங்கினுர். வால்மீகர், அங்கே ஸூர்ய குலத்தில் கல்மாஷபாதர் என்ற அரசன் யாகம் செய்தார் என்றும், அது முடிவுபெறுங் காலத்தில், ஒரு அஸுரனது மோசச் செயலால், அவருக்கு வஸிஷ்டர் சாபம் வந்ததென்றும் சொல்லி இன்னுமனேக திவ்ய கதைகளைப் பேசி முடித்த பின்பு, சத்ருக்னர் ஒரு பர்ணசாலைக்குள் போய்ப் படுத்துக் கொண்டார். அப்பொழுது அதே ஆச்ரமத்திலிருக்கும் ஸீதைக்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்தன. அதில் ஒருவனுக்கு, வால்மீகி தர்ப்பை நுனியால் சுத்த ஜலம் இறைத்ததால், குசன் என்ற பெயரும், மற்றொரு பிள்ளைக்குத் தர்ப்பைக் கட்டையால் ஜலம் இறைத்ததால் லவன் என்ற பெயரும் உண்டாயிற்று. இதைக் கேட்டுச் சத்ருக்னர் ஆநந்தித்துவிட்டு, மறுநாட் காலையில் மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

வினு 101.—தனது சேனைகளைச் சத்துருக்னர் என்ன செய்தார்? ரிஷிகள் என்ன வழிகளை இவருக்குச் சொன்னுர்கள்?

விடை.—மதுரைக்கு வெகு தூரத்திலேயே சேனைகளைச் சத்துருக்னர் நிறுத்திவிட்டு, சியவனரது ஆசிரமம் சென்ருர். அங்கிருந்த ரிஷிகள் யாவரும் மிக்க

ஸந்தோஷித்து, ராமர் சத்துருக்னருக்குச் சொல்லி யனுப்பியபடியே, அவர்களும் சொன்னார்கள். மேலும், மாந்தாதா லவணனோடு எதிர்த்து, அவனது சூலத்தால் சாம்பலானார் என்றும் சொல்லி, அவனைச் சூல மெடுக்க இடங்கொடாமல் இருக்க வேண்டுமென்றும், சத்துருக்னரை எச்சரிக்கை செய்தார்கள்.

வினா 102.—லவணாஸுரனுக்கும் சத்துருக்கனருக்கும் நடந்த சண்டையின் விசேஷமும் முடிவும் என்ன?

விடை.—லவணனை உள்ளே விடாது வாயிலிலேயே எதிர்த்துச் சத்துருக்னர் போர் செய்ய, லவணன் எத்தனையோ மரங்களை வேரோடு பிடுங்கிச் சத்துருக்னர் மேலெறிந்தான். அவர் அவைகளை எல்லாம் தமது பாண வேகத்தால் தடுத்தார். இப்படி இருக்கும் பொழுது, சத்துருக்னருக்குக் கொஞ்சம் சிரமம் உண்டாயிற்று. உடனே இதைக் கண்ட லவணன், ஒரு பெரிய மரத்தால் அவரை யடிக்க, அவர் மூர்ச்சை யடைந்தார். அப்பொழுது நாம் ஜெயித்துவிட்டோம் என்ற கர்வத்தால் லவணனுக்கு உள்ளேயிருக்கும் சூலத்தை எடுத்துவர வேண்டுமென்று தோற்றவில்லை. கொஞ்ச நாழிகையில் சத்துருக்னர் எழுந்து, ராமர் கொடுத்த நாராயணாஸ்திரத்தைத் தகுந்த ஜாக்கிரதையோடு பிரயோகித்து லவணனைக் கொன்றார். நாராயணாஸ்திரம் தனது வேலையை முடித்துவிட்டுச் சத்துருக்னரிடம் திரும்பி வந்து விட்டது.

வினா 103.—இந்த லோகோபகாரத்தைச் செய்த பின்பு சத்துருக்னர் என்ன செய்தார்?

விடை.—பன்னிரண்டு வருஷம் லவணனது ராஜ்யத்தை மனுநீதிவழுவாது அவர் ஆண்டு வந்தார். பின்பு ராமரைப் பார்க்கவேண்டுமென்று தோன்ற, தமது ராஜ்யத்தை மந்திரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு, அயோத்தியை நோக்கிச் சென்றார். வழியில் வால்மீகி ஆசிரமத்தில் ஓர் இரவு தங்க, அப்பொழுது ஸீதையின் குமாரர்களான குசலவாள் கானம் செய்யும் அர்த்த கர்ப்பிதமான ராம சரிதையைக் கேட்டு ஆனந்தித்து, யார் பாடியதென்று அறியாமலே, மறுநாள் அயோத்தி நோக்கிச் சென்று ராமரைத் தரிசித்தார். பின்பு அங்கே ஒருவாரம் இருந்துவிட்டு, மறுபடியும் மதுரா பட்டணம்வந்து சேர்ந்தார்.

வி௵ 104.—இப்படிச் சத்துருக்னர் வந்துபோன பின்பு, ராம ராஜ்யத்தில் ஏதாவது விசேஷம் நடந்ததா?

விடை.—ராம ராஜ்யத்தில் நடவாத விஷயம் ஒன்று அப்பொழுது நடந்தது. ஒரு பிராமணனது இளங்குழந்தை அகாலத்தில் மரணமடைய, அவர் அரண்மனை வாசலில் வந்து, அரசனைப் பழிக்கத் தொடங்கினார்.

வி௵ 105.—இப்படி நடந்ததற்குக் காரணம் என்ன? இதை யார் ராமருக்குத் தெரிவித்தது?

விடை.—வர்ணாசிரம தர்மம் ராம ராஜ்யத்தில் தப்பியிருப்பதுதான் இதற்குக் காரணம் என்றும், அப்படி அந்தத் தர்மத்தை மீறி நடந்தவனுக்குத் தகுந்த தண்டனை செய்தால், இந்தக் குழந்தை பிழைக்குமென்றும், நாரதர் ராமருக்குச் சொன்னார்.

வினா 106.—ராமர் இக்குற்றத்தை எவ்வாறு கண்டு பிடித்து என்ன தண்டனையைச் செய்தார்?

விடை.—உடனே ராமர், மரணமடைந்த குழந்தையின் சரீரத்தை அழுகாதிருக்கும்படி தைலத்தில் போட்டு வைக்கச் சொல்லிவிட்டு, குபேரனது புஷ்பகத்தை மனதில் தியானம் செய்தார். உடனே புஷ்பகம் வர, அதன்மேல் ஏறி தமது ராஜ்ய முழுவதையும் சுற்றிப் பார்த்துவந்தார். இப்படிச் சுற்றிவருகையில், விந்தியமலைக்குத் தெற்கே ஜம்புகன் என்ற சூத்திரன் தர்ம விருத்தமாய் ஒரு மரத்தில் ஏறி தலைகீழாய்த் தொங்கிக் கொண்டு தவம் செய்வதைக் கண்டுபிடித்து, தமது கத்தியால் அவனது தலையை வெட்டினார். உடனே அயோத்தியில் இறந்த குழந்தை பிழைத்து எழுந்தது.

வினா 107.—இதன் பின்பு ராமர் எங்கே போனார்? அங்கே என்ன கிடைத்தது?

விடை.—ராமர் அகஸ்தியர் ஆசிரமம்செல்ல, அவர் ராமருக்கு ஒரு உயர்ந்த ஆபரணத்தைக் கொடுத்து வாங்கிக்கொள்ளும்படி சொல்லி, அதற்குத் தகுந்த நியாயங்கள் காட்டி ராமரை வாங்கும்படி செய்தார்.

வினா 108.—இந்த ரிஷிக்கு இவ்வாபரணம் எப்படிக் கிடைத்தது?

விடை.—திரேதாயுகத்தில் அகஸ்தியர் உலகெங்கும் பார்க்க விரும்பி, யாத்திரை செய்து கொண்டுவரும் பொழுது, ஒரு நிர்ஜனமான அரண்யம் வந்து சேர்ந்தார். அங்கே திரிந்துகொண்டிருக்கும்பொழுது, ஒரு திவ்ய தடாகத்தையும், அதன் கரையில் ஒரு குடிசை

யையும் கண்டார். அக்குடிசையில் ஒருவரும் இல்லா ததை கண்டு, அதில் அன்றிரவு தூங்கிவிட்டு, மறுநாள் காலையில் குளக்கரைக்கு வந்தார். அப்பொழுது ஒரு பிணம் அந்தக் குளத்தின் மத்தியில் மிதப்பதைக் கண்டார். இதென்னவென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுதே, விமானத்தில் ஒரு திவ்ய புருஷன் இறங்கிவரப் பார்த்தார். அவன் வந்ததும், அந்தப் பிணத்தை வயிறாரத் தின்றுவிட்டு விமானத்தில் ஏறினான். அப்பொழுது அகஸ்தியர், அந்தத் திவ்ய புருஷனது தாழ்ந்த நிலையைக் கண்டு பரிதபித்து அவனை அழைத்தார். அந்தப் புருஷன் வந்து தனது பூர்வ சரித்திரத்தைச் சொல்லி, பின்பு அகஸ்தியருக்கு இந்த ஆபரணத்தைக் கொடுக்க, அவனுக்கு நல்ல கதி வந்து இந்தப் பிணம் தின்னும் தொழில் அப்பொழுதே நீங்கிற்று. இக்காரணத்தால் அகஸ்தியருக்கு இவ்வாபரணம் கிடைத்தது.

வின 109.—இந்தத் திவ்ய புருஷனுக்கு இப்பிணம் தின்னும் நிலை வருவானேன்? அது அகஸ்தியரால் நீங்குவானேன்?

விடை.—இவன் முன்பு விதர்ப்ப தேசாதிபதியாய் இருந்தான். இவனுக்குச் சுவேதன் என்று பெயர். தனது தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, இந்த நிர்ஜனமானகாட்டில் இக்குளக்கரையில் இருக்கும் பர்ணசாலையில் தபஸு செய்துவந்தான். இப்படி இருக்கையில் இவன் தேகம் நழுவிப்போயிற்று. அப்பொழுது வந்த விமானத்தில் ஏறிக்கொண்டு இந்திரலோகம் போக அங்கு அவனுக்குப் பசியும் தாகமும் அதிகரித்துவிட்

-டன. இதன் காரணத்தை அறிவதற்காக இவன் பிரம்மாவிடம் சென்றான். பிரம்மா "நீ தபஸு செய்யுங்கால் உனது தேகத்தை மாத்திரம் போஷித்து வந்தாயே ஒழிய, தர்ம சிந்தையோடு இருக்கவில்லையாதலால், உனக்கு இக்கொடிய கஷ்டம் வந்தது; இந்தக் கொடிய பசி தீரும் வரையிலும், நீ உனது பிணத்தைத் தின்னவேண்டும்; ஒவ்வொரு நாள் காலையிலும், உன் பிணம் அக்குளத்தில் மிதக்கும்; கடைசியில் அகஸ்திய முனியைத் தரிசித்து அவருக்கு ஒரு தானம் செய்தவுடன், அக்கஷ்டம் நீங்கும்" என்று சொன்னா. ஆதலால் இவனுக்கு அகஸ்தியரால் அக்கஷ்டம் நீங்கிற்று.

வினா 110.—சுவேதன் தபஸு செய்த காடு ஏன் நிர்மானுஷ்யமாய் இருந்தது என்று ராமர் கேட்டதற்கு அகஸ்தியர் என்ன பதில் சொன்னார்?

விடை.—இக்ஷ்வாகு வம்சத்தில் தண்டன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் பாலியத்தில் மிக்க கொடியவனாயிருந்ததால் இந்தக்காட்டை அவனுக்குக் கொடுத்து, தன் பட்டணத்திலிருந்து அவன் தகப்பனார் தண்டனைத் துரத்திவிட்டார். தண்டன் இந்தக் காட்டிற்கு வந்து ஒரு பட்டணம் உண்டாக்கிக் கொண்டு, சுக்ராசாரியரைக் குருவாக அடைந்து, சில காலம் நெறி வழுவாது, செங்கோல் செலுத்திவந்தான். அவன் ஒருநாள், வேட்டைக்குப் போகையில், காம வெறியால் சுக்ராசாரியரது பெண்ணாகிய அரஜையைக் கஷ்டப்படுத்த, அவள் தகப்பனார், இக்குளமும் இவ்வாசிமரமும்

தவிர, மற்றைய தண்டனது நாடெல்லாம் மண்மாரியால் ஏழு நாளைக்குள் அழியக்கடவது என்று சபித்தார். இப்படி இந்த வனம் அழிய, ஒரு ஜந்துவும் இங்கு அதன் பின்பு கொஞ்சகாலம் வராமல் இருந்ததினால் இது நிர்மானுஷ்யமாய் இருந்தது என்று அகஸ்தியர் சொன்னார்.

வினா 111.—ராமர் அகஸ்தியரிடம் விடைபெற்று அயோத்திக்குப் போனபின்பு என்ன செய்தார்?

விடை.—தான் ஏறிவந்த புஷ்பகத்தை ஸந்தோஷத்தோடு குபேரனிடம் அனுப்பிவிட்டுத் தனது ஸபைக்குச் சென்று, பரத லக்ஷ்மணரோடு ராஜஸூய யாகம் செய்யலாமா என்ற விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார். 'ராஜஸூய யாகம் பிராணி ஹிம்ஸைக்குக் காரணமாகையால் கருணாநிதியாகிய உம்மால் அது செய்யத் தகுந்ததல்ல' என்று பரதர் சொன்னார். லக்ஷ்மணர் ராஜஸூயம் போன்றதாயும், மஹா புண்யகரமாயுமுள்ள அசுவமேத யாகம் செய்யலாம் என்று தெரிவித்தார். ராமரும் அப்படியே செய்வதென்று தீர்மானித்தார்.

வினா 112.—அசுவமேதம் அவ்வளவு சிறந்ததென்பதற்கு லக்ஷ்மணர் என்ன ஆதாரம் காட்டினார்?

விடை.—இந்திரனைக் கொல்வதற்காக, அஸுரர்கள் முன் காலத்தில் விருத்திரன் என்ற அஸுரனை ஒரு யாகத்தில் உற்பத்தி செய்து விட்டார்கள். அவன் உண்டானதும் மஹா தபஸ்வியாயும் பக்தனாயும் இருந்தான். அதனால் அவன் விஷ்ணுவினது கிருபையால் தன்னைக் கொன்றுவிடுவான் என்று பயந்து, இந்திரன்

விஷ்ணுவினிடம் சென்று விஷயங்களை தெரியப்படுத்த அப்பொழுது அவர். தனது சக்தியை மூன்று பாகம் பிரித்துக்கொண்டு, ஒரு பாகத்தால் இந்திரனுள்ளும், மற்றொரு பாகத்தால் அவன் வஜ்ராயுதத்துள்ளும், மூன்றாவது பாகத்தால் பூமியுள்ளும் புகுந்துகொள்ள, உடனே இந்திரன் தனது வஜ்ராயுதத்தால், தபஸு செய்து கொண்டிருந்த விருத்திரனது தலையை யறுத்து விட்டான். அதைக் கண்ட மஹா விஷ்ணு பூமியிலிருந்து தாங்கினார். உடனே இந்திரனைப் பிரம்மஹத்தி வந்து சூழ்ந்தது. இதைக்கண்டு பயந்து அவன் ஒரு தாமரைத் தண்டினுள் அநேக நாள் ஒளிந்திருந்தான். அப்பொழுது தேவர்கள் யாவரும், விஷ்ணுவைக் குறித்து அசுவமேத யாகத்தை நடத்தி முடித்ததால், இந்திரனுக்குப் பிரம்மஹத்தி நிவாரணமாயிற்று என்று லக்ஷ்மணர் ஆதாரம் காட்டினார்.

வினு 113.—இந்த விஷயத்தில் ராமருக்கு அப்பொழுது என்ன கதை ஞாபகம் வந்தது?

விடை.—கர்த்தமப் பிரஜாபதியின் வம்சத்தில் பிறந்த இளன் என்ற மஹாராஜன், மஹாதேவரது ஆஜ்ஞையால் ஸ்திரீ ரூபமடைந்து, ஒருமாதம் ஸ்திரீயாகவும் அடுத்த மாதம் புருஷனாகவும் மாறி மாறி இருக்கும்படி நேரிட, அப்பொழுது இந்த அசுவமேத யாகத்தை மஹாதேவரை உத்தேசித்துச் செய்து முடிக்க, ஸ்திரீ ரூபம் முழுவதும் நீங்கிக் காசி தேசாதிபதியான கதை ராமருக்கு ஞாபகம் வந்தது.

வினு 114.—இளன் என்ற அரசனுக்கு இப்படி ஸ்திரீ ரூபம் வருவானேன்?

விடை.—மஹாதேவர் ஸ்திரீ உருக்கொண்டு தாம் பார்வதியோடு கிரீடித்து வரும்பொழுது குமாரிவனத்துள் வரும் யாவரும் ஸ்திரீகளாக வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார். இளன் ஒரு வனத்தில் வேட்டை யாடிக்கொண்டு வரும்பொழுது, அவ்வனத்துட் புகுந்ததும், அவனுக்கும் பெண்ணுருவம் வந்துவிட்டது. பின்பு பார்வதியின் அனுக்கிரகத்தால், அப்பெண்ணுருவம் அவனுக்கு ஒரு மாதமும், ஆண் உருவம் ஒரு மாதமும் மாறி மாறி வரும்படியாயிற்று.

வினா 115.—இவனுக்கு இந்த அசுவமேத யாகத்தைச் செய்ய யார் ஸஹாயம் செய்தார்கள்?

விடை.—சந்திரனது பிள்ளையாகிய புதன், இந்த இளனைப் பெண்ணுருவோடு இருக்கும் மாதத்தில் கண்டு மோஹித்து, இவனை விவாஹம் செய்துகொண்டான். பின்பு, ஆணுருவம் வந்தபொழுது இருவரும் ஸ்நேகிதர்களாகவும் மற்றை வேளையில் ஸ்திரீ புருஷர்களாகவும் இருக்க, கடைசியில் இவர்களுக்குப் புரூரவஸ் என்ற பிள்ளை உண்டானான். உடனே புதன் இவனிடம் திருப்தியடைந்து, அசுவமேத யாகத்திற்கு வேண்டிய ஸஹாயம் செய்து இவனுக்குப் புருஷ ரூபத்தை ஸம்பாதித்துக் கொடுத்தான்.

வினா 116.—ராமர் செய்த அசுவமேத யாகத்திற்கு யார் வந்தார்கள்?

விடை.—ஸுக்ரீவன், விபீஷணர் முதலியவர்கள் தங்கள் பரிவாரங்களோடு வந்தார்கள். வால்மீக ரிஷியும் குசலவர்களோடு அங்கு வந்தார். இன்னும் அநேக உத்தமர்களும் வந்தார்கள்.

வினா 117.—பத்தினியில்லாது, எப்படி ராமர் யாகம் செய்யத் துணிந்தார்?

விடை.—ஸீதையைப்போல் ஒரு உருவம் தங்கத்தினால் செய்து, ஸீதைக்குப் பதிலாக வைத்துக்கொண்டு யாகத்தை நடத்தினார்.

வினா 118.—குசலவர்கள் ராமரை ஸந்தித்தார்களா? எப்படி? ராமர் செய்த வெகுமானத்தை அவர்கள் அங்கீகரித்தார்களா?

விடை.—வால்மீகி ரிஷி, ராமசரிதையை நல்ல அர்த்தகர்ப்பிதமான சுலோகரூபமாய்ச் செய்து இவர்களுக்கு உபதேசித்திருந்தார் என்றும், இவர்களது கானத்தைக் கேட்ட சத்ருக்னர் முன்னமே பரவசரானார் என்றும் சொல்லியிருக்கிறோம். அந்த ராம சரிதையை, வால்மீகியின் உத்திரவின்படி இவர்கள் கானம் செய்துகொண்டு வர, ராமர் கண்டு பிரீதியடைந்து, அவர்களை அச்வமேத மகா மண்டபத்தில் கானம் செய்யும்படி உத்தரவு செய்தார். ஆனால் வால்மீகர், இவர்களுக்கு ராமரிடம் இருந்து ஒருவித வெகுமானத்தையும் பெறக் கூடாதென்று, முன்னமேயே ஆக்ஞாபித்திருந்தார். ஆகையால் இந்தக கானத்தின் முடிவில், ராமர் ஸந்தோஷமாய்க் கொடுத்த தனத்தை இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

வினா 119.—அப்பொழுது ராமர் இவர்களை நோக்கி என்ன சொன்னார்?

விடை.—நீங்கள் யார்? இந்தக் கிரந்தம் யார் செய்தது? என்ற இதுபோன்ற கேள்விகளைக் கேட்டார். அதற்கு அவர்கள், தாங்கள் வால்மீகரது சிஷ்யரென்றும்,

அவரே இதைச் செய்தருளினார் என்றும் பதில் சொன்னார்கள்.

வினா 120.—ராமர் இவர்களை இன்னார் என்று எப்படித் தெரிந்துகொண்டார்? அதன் பின்பு அவர் என்ன செய்தார்?

விடை.—இவர்களது குரலையும் முகக்குறிகளையும் பார்த்து, இவர்கள் தமக்கு ஸீதையினிடம் பிறந்த பிள்ளைகள் என்று அறிந்துகொண்டார். அங்கு ஸீதையும் வந்திருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. உடனே ஒரு நம்பிக்கையான தூதனை யழைத்து ஸீதை வந்திருந்தால், நாளை ஸகல ஜனங்கள் நிறைந்த ஸபையில் ஒரு பிரதிக்ஞை மூலமாய் தனது பாதிவ்ரத்யத்தை அவள் ஸகலரும் அறியும்படி செய்தால், நாம் அவளைச் சேர்த்துக்கொள்ள எண்ணுகிறதாக, வால்மீகருக்குத் தெரிவித்து, அவரது அபிப்பிராயத்தை அறிந்துவரும்படி சொன்னார்.

வினா 121.—தூதன் என்ன அறிந்துகொண்டு வந்தான்? ராமர் என்ன ஏற்பாடுகள் செய்தார்?

விடை.—வால்மீகர் ராமரது எண்ணத்தை அங்கீகரித்தார் என்றும், அவர் ஸீதையை மறுநாள் அசுவமேத மண்டபத்திற்கு அழைத்து வந்து சபதம் செய்யும்படி செய்வதாக ஒப்புக்கொண்டார் என்றும், தூதன் வந்து சொன்னான். உடனே, ராமர் ஸகல ஜனங்களையும், பிராம்மண சிரேஷ்டர்களையும், ரிஷீசுவரர்களையும், மறுநாள் ஸபையில் வந்து கூடும்படி வருந்திக் கேட்டுக்கொண்டார்.

வினா 122.—ஸீதை அசுவமேத மஹா மண்டபத்தில் வந்து என்ன சபதம் செய்தாள்?

விடை.—மறுநாள் ஸகல ஜனங்களும் கூடி இருக்கும் ஸபையில், வால்மீகியைப் பின்தொடர்ந்து ஸீதையும் வந்தாள். இவள் செய்யும் சபதத்தைப் பார்க்க, தேவதைகள், ஸித்தர்கள் முதலியவர்கள் யாவரும் வந்து கூடினார்கள். அந்த ஸபையில் ஸீதை, 'நான் உண்மையாய்ப் பதிவிரதையாய் இருந்து வேறு புருஷன் ஒருவனையும் மனத்தால் கூட சிந்திக்காமல் இருந்தால், இப்பொழுது பூமி எனக்கு ஒரு இடம் கொடுத்து ஆதரிக்கட்டும்' என்ற கொடிய சபதத்தைச் செய்தாள்.

வினா 123.—உடனே என்ன விநோதம் நடந்தது?

விடை.—ஸீதை சொல்லி வாய் மூடு முன்னமேயே, பூமி பவீர் என்று பிளக்க, அதன் உள்ளிருந்து ஒரு திவ்ய விமானத்தில் பூமிதேவியானவள் தோன்றினாள். யாவரும் இந்த விநோதத்தைக்கண்டு ஸ்தப்தமாய் இருக்கும்பொழுது, ஸீதையைப் பூமிதேவி தனது மடியில் உட்கார வைத்துக்கொண்டு, அதிசீக்கிரத்தில் பூமியில் பிரவேசித்தாள். உடனே பூமி பழைய நிலையையடைந்தது.

வினா 124.—இந்த ஆச்சரியத்தைக் கண்டவர்கள் என்னென்ன சொன்னார்கள்? என்னென்னசெய்தார்கள்?

விடை.—இதைக்கண்ட தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சிலர் ராமரது தர்ம சிந்தையைப் புகழ்ந்தனர். சிலர் ஸீதையினது கற்பையும், அவள் செய்த செய்கையையும் புகழ்ந்தனர். இப்படிக் கொஞ்ச நாழிகையான பின்பு, யாவரும் துக்கத்தை அடைந்தார்கள். ராமருக்குத் தான் செய்யும் காரியத்தின் முடிவு முதலியவைகள் தெரிந்திருந்தும், எல்லாரோடு தாமும் துக்கிப்பதுபோ

லக் காட்டி, அதிக கோபத்தை அடைந்தவர்போல், 'பூமியே! ஸீதையை நீ கொண்டுவந்து விடாவிட்டால், நான் உன்னை நாசம் செய்வேன்' என்று கர்ஜித்தும் காட்டினர்.

வினு 125.—இந்தத் துக்கம் எப்படிச் சாந்தமடைந்தது? பின்பு ராமர் என்ன செய்தார்? ஸீதையைப் பிரிந்து எவ்வளவு காலம் உலகில் இருந்தார்?

விடை.—பிரம்மா வந்து ராமருக்கு அவாது மூல ரூபத்தை ஞாபகப்படுத்த, உடனே அவர், துக்கம் சாந்தமடைந்தது. (இதுபோலவே நாமும் நமது உண்மை நிலையைக் குரு மூலமாய் அறிவோமே யானால், நம்மையும் எவ்வித கஷ்டமும் அணுகாது. அஞ்ஞானம் அல்லது அறியாமையே ஸகல கஷ்டத்திற்கும் காரணம்.) இன்னும் ராமசரிதம் பாக்கியிருக்கிறதென்றும், அதை வால்மீகரிடம் கேட்கலாம் என்றும், அவர் சொல்லியது யாவும் உண்மை என்றும் பிரம்மா சொல்லி, ராமருக்கு இதைக் கேட்கவேண்டும் என்ற ஆவல் வரும்படி செய்துவிட்டு, பிரம்மா தமது இருப்பிடம் சென்றார். பின்பு வால்மீகர் மூலமாய்த் தமது கதையைப் பூர்த்தியாய்க் கேட்டுவிட்டு, ராஜநீதியை வழுவாது நடத்திக்கொண்டு, ராமர் பதினாயிரம் வருஷங்கள் உலகில் ஜீவித்திருந்தார். ராவண ஸம்ஹாரத்திற்குப் பிறகு ஸீதை இருந்தது ஆயிரம் வருஷந்தான். மீதியான காலங்களில் இவர் ஒரு ஸ்திரீயையும் கனவில் கூட நினைக்கவில்லை. அப்படியானல், இவர் எப்படி இக்காலத்தவர்போல், மறு விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணி இருக்கக்கூடும்? இம்மாதிரியான எண்ணங்களின்றி ஸீதையி

னது ஸ்வர்ண விக்கிரகத்தை வைத்துக்கொண்டே ஸகல யாகங்களையும் செய்து முடித்தார். தனக்கு ஸீதையின் ஞாபகம் வந்தபொழுதெல்லாம், ஸத்கிரந்தங்களிலும் ராஜ்ய நீதியிலும் தமது மனதைச் செலுத்தி, தமது பிரஜைகள் ஸுகமாய் வாழும்படி ராமர் ராஜ்யாதிகாரம் நடத்திவந்தார்.

வினா 126.—இப்படி ராமர் ராஜ்யமாண்டு வருங்கால், இன்னும் யாரோடு இவருக்குச் சண்டை செய்யும்படி நேரிட்டது? அந்தச் சண்டையின் முடிவென்ன?

விடை.—ராமர் ஸுகமாய் ராஜ்யமாண்டு வருங்கால், கேகய தேசாதிபதியான யுதாஜித்து, ராமரிடம் தனது புரோஹிதரான கார்க்யர் என்பவரைத் தூதராக அனுப்பினான். அவர், கேகய தேசத்தின் ஓர் பாகமாகிய ஸிந்து நதிக்கரையின் இருபக்கத்தையும், சில கந்தர்வ ஜாதியார்கள் பிடித்துக்கொண்டு, யுதாஜித்தின் ஆக்ஞைப்படி நடவாமல் விரோதம் செய்கிறார்கள் எனவும், அவர்களை யடக்குவதற்கு அரசன் ராம ஸஹாயத்தை வேண்டுகிறான் என்றும் தெரிவித்தார். உடனே ராமர் தமது தம்பியாகிய பரதனை யழைத்து, ‘இக்கந்தர்வர்களைச் சில சைந்யங்களோடு சென்று ஸம்ஹரித்து, உனது பிள்ளைகள் இருவரையும், கேகய ராஜ்யத்தை இருபாகமாகப் பிரித்து, இரண்டு பிரதான பட்டணங்களிலிருந்து அரசாளும்படி செய்து, விட்டுத் திரும்பிவா’ என்று ஆக்ஞாபித்தார். பரதர் அப்படியே சேனைகளோடு போய், அக்கந்தர்வர்களை எல்லாம், காலாஸ்திரமென்ற ஓரே அஸ்திரத்தால் கொன்று, ராமர் சொல்லியபடி செய்துவிட்டு, ஐந்து வருஷம் முடிந்த பின் ராமரிடம் திரும்பி வந்தார்.

வினா 127.—இப்படிப் பரதாதி பிள்ளைகளுக்கு முடிசூட்டிய பின்பு, ராமர் என்ன செய்தார்

விடை.—இரண்டு திவ்விய பட்டணங்களை ஆராய்ந்து கண்டு பிடித்து, அவைகளில் லக்ஷ்மணரது இரண்டு பிள்ளைகளுக்கும் முடி சூட்டுவித்தார்.

வினா 128.—இப்படி ஸகல தர்மங்களையும்செய்து முடித்த பின்பு என்ன விசேஷம் நடந்தது?

விடை.—காலதேவதை ஒரு தபோமுனி வடிவங் கொண்டு ராமரிடம் வந்து, ஒரு ரகசியம் சொல்லவேண்டும் என்றும் அதைத் தான் சொல்லும்போது, யாராவது உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாலாவது, அல்லது அந்த சமயத்தில் அவ்விடம் வந்தாலாவது, அவர்களை அவர் கொல்லுவதற்குத் தகுந்தவர்களாய் எண்ண வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான்.

வினா 129.—இவ்விஷயத்தில் ராமர் என்ன ஏற்பாடு செய்தார்?

விடை.—வாயிலிலிருந்த காவலர்களை எல்லாம், ஒதுப்புறமான இடம் போகச்சொல்லி, லக்ஷ்மணரைத் தலைவாயிலிலிருந்துகொண்டு ஒருவரையும் விடாது வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்றும், அப்படி யாராவது வருவார்களானால், அவர்கள் தன்னால் கொல்லத் தகுந்தவர்கள் என்றும் உறுதியான கட்டளையிட்டார்.

வினா 130.—இப்படி ஏற்பாடு செய்தபின்பு ராமரிடம் தபோமுனி வடிவங்கொண்ட காலன், என்ன ரகசியத்தை வெளியிட்டான்?

விடை.—தான் காலன் என்றும், அவரிடம் வந்து அவருக்கு இவ்வுலகில் இருக்கவேண்டிய காலம் முடி-

ந்துவிட்டது என்றும், அவருக்கு இஷ்டமிருந்தால், ஸகல தேவரும் மகிழ வைகுண்டம் வரலாம் என்றும் தெரிவிக்கும்படி, பிரம்மதேவர் ஆக்ஞாபித்ததாகச் சொன்னான். ராமரும் பிரம்மாவின் உத்திரவின்படி தாம் வைகுண்டம் வருவதாக ஒப்புகொண்டார்.

விஞ 131.—இப்படி ராமர் ரகஸியம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இவரது ஆக்ஞைக்கு விரோதமாய் என்ன நடந்தது?

விடை.—இவர்கள் இப்படி ரகஸியம் பேசிக்கொண்டிருக்கையில் லக்ஷ்மணரே அங்கு வரும்படி நேரிட்டது.

விஞ 132.—இவ்விதமாய் லக்ஷ்மணர் ராமரது ஆக்ஞையை மீறி நடக்கக் காரணம் என்ன?

விடை.—லக்ஷ்மணர் ஜாக்கிரதையாய் வாயிலில் காத்திருக்கும் பொழுது, மஹா கோபிஷ்டராகிய துர்வாஸ மஹரிஷி வந்து, அவஸரமாய் ராமரைப் பார்க்க வேண்டும் என்றும், இவ்வேண்டுகோளுக்கு விரோதம் செய்தால், அவரது பந்து மித்திரர்கள், இராஜ்யம் முதலிய ஸகலத்திறகும், சாபங்கொடுப்பதாகவும் கடிந்து சொன்னார். இவ்வாறு ஸகலருக்கும் கேடு வருவதைவிட்டுத் தமக்கு மாத்திரம் கேடு வந்தால் வரட்டும் என்று தைரியமாய் லக்ஷ்மணர், ராமரும் காலனும் ரகஸியம் பேசிக்கொண்டிருந்த விடம் வந்து, துர்வாஸ மஹரிஷியின் வரவைத் தெரிவித்தார்.

விஞ 133.—இதைக் கேட்டதும் ராமர் துர்வாஸருக்காக என்ன ஏற்பாடு செய்தார்?

விடை.—உடனே காலனை அனுப்பிவிட்டு, துர்வாஸ

ருக்கு மரியாதைகள் செய்து அவருக்கு என்ன வேண்டு மென்று கேட்க, தாம் கொஞ்ச காலம் உபவாஸமாய் இருந்ததால், தமக்குப் பசி அதிகமாய் இருக்கிறதென் றும், ஆதலால் அதைத் தீர்த்துவைக்க வேண்டுமென் றும் அவர் கேட்டுக்கொண்டார். உடனே ராமர், அவ ருக்குத் திருப்தி வரும் வரையில் உணவளித்து ஸந்தோ ஷம் உண்டாகும்படி செய்தார். ரிஷி தமது இருப் பிடம் சென்றார்.

வினா 134.—ராமர் காலனுக்குச் செய்து கொடுத்த பிரதிக்ஞையை எப்படி லக்ஷ்மணர் விஷயத்தில் செலுத் தினார்?

விடை.—காலனிடம் சொல்லியபடி லக்ஷ்மண ரைக் கொல்ல ராமருக்கு மனது வரவில்லை. தனது பிரதிக்ஞையை விடவும் மனது வரவில்லை. இப்படித் தத்தளித்துக்கொண்டு, ஆசாரிய சிரேஷ்டர்களை யழை த்து, அவர்களோடு ஆலோசித்து, கடைசியாய், ஸீதை யைத் தியாகம் செய்ததுபோல், லக்ஷ்மணரையும் தன் முகத்தில் விழியாதிருக்கும்படி சொல்லி யனுப்பிவிட் டார். உடனே லக்ஷ்மணர் தம் வீட்டிற்குக் கூடப் போகாமல் அயோத்திக்கு வெளியே போய்விட்டார்.

வினா 135.—இப்படித் தியாகம் செய்யப்பட்ட லக்ஷ்மணரது கதி என்னமாயிற்று?

விடை.—அயோத்தியை விட்டு நேரே சென்ற லக்ஷ் மணர் ஸரயூ நதிக்கரையை அடைந்தார். முதலில், அவ ருக்கு ராமரை விட்டு வந்துவிட்டோமே என்ற துக்கம் இருந்தபோதிலும், அதை அடக்கிக்கொண்டு, மனோ நிரோதம் செய்து, தமது மானிட சரீரத்தைத் தள்ளி,

தமது மூல ரூபமாகிய ஆதிசேஷனுருக்கொண்டு, ஸகல தேவர்களுக்கும் ஸந்தோஷம் உண்டாக வைகுண்டம் சென்று, மகாவிஷ்ணுவாகிய ராமரது வரவை எதிர் பார்த்திருந்தார்.

வின 136.—இப்படி லக்ஷ்மணர் பரமபதம் அடைந்ததும், ராமர் என்ன செய்தார்?

விடை.—காலனது வேண்டுகோளின்படி தாமும் வைகுண்டத்திற்குப் போவதற்காகத் தமது ராஜ்யத்தைப் பரதருக்குக் கொடுப்பதாக எண்ணினர். பரதர், தாமும் கூடவே பரமபதம் வருவதாகச் சொல்லி, ராமரது பிள்ளைகள் இருவருக்கும் இரண்டு பட்டணங்களில் பட்டாபிஷேகம் செய்வித்தார். சத்ருக்கினருக்கும் தூதர்களை அனுப்பிவித்து, பரதர் நடந்த விஷயங்களைத் தெரிவித்தார். அவரும் தனது பிள்ளைகளிருவருக்கும் தமது ராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு, ராமரோடு பரமபதம் போகத் தயாராய் வந்துவிட்டார். வானர சிரேஷ்டர்கள், ஸுக்ரீவன் விபீஷணர், ஹனுமார் முதலியவர்களும் அங்கு வந்துவிட்டார்கள்.

வின 137.—இவர்களில் யார் யாரைத் தம்மோடு வரும்படியும், யார் யாரை உலகத்திலிருக்கும்படியும் ராமர் ஆக்ஞாபித்தார், பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—அயோத்தி நகரத்து ஜனங்கள், வானரர்கள், பரத சத்ருக்கினர்கள், ஆகிய இவர்களைத் தம்மோடு கூட வரும்படி அவர் கட்டளையிட்டார். ஹனுமானை ராமாயணம் எவ்வளவு காலம் உலகத்திலிருக்கிறதோ, அதுவரையில் பூமியில் இருக்கும்படி செய்தார். விபீஷணருக்கு, தமது குலத்தில் ஆராதித்துவந்த ரங்க

நாத ஸ்வாமியைக் கொடுத்து அவரை ஆராதித்துக்கொண்டு உலகத்தில் சிரஞ்சீவியாய் இருக்கும்படி கட்டளையிட்டார். ஜாம்பவான், மைந்தன், த்விவிதன் முதலியவர்களை, கலியுகாரம்பம் வரையில் உலகத்திலிருந்துவிட்டுப் பின்பு பரமபதம் வரும்படி கட்டளையிட்டார். இப்படிக் கட்டளையிட்டு பிறகு, ஸரயூ நதிக்கரையை நோக்கி மஹா பிரஸ்தான யாத்திரைக்கு ஸங்கல்பம் செய்துகொண்டு, ராமர் மன உறுதியோடு மௌனமாயும், வந்த வழியைத் திரும்பிப் பாராமலும் புறப்பட்டார். ஸகல ரிஷிகளும், ஜனங்களும், பந்துக்களும் ராமரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

வினா 138.—ராமர் பரமபதம் சென்ற வைபவம் எப்படி இருந்தது?

விடை.—இவ்வாறு ஸரயூ நதிக்கரையை யடைந்ததும், அங்கு ஸகல தேவர்களும், பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு தயாராய் இருக்கக்கண்டார். அப்பொழுது அங்கே எல்லோரையும் ஸ்வர்க்கத்திற்கு அழைத்துப்போக அநேக விமானங்கள் வந்திருந்தன. ஸகல தேவர்களும் ராமரைத் துதிக்க, எல்லோரும் ஸரயூ நதியில் மூழ்கினார்கள். கொஞ்ச நாழிகையில் ராமர், பரத சத்ருக்கினர்கள், விஷ்ணு உருவாகவும் புறப்பட்டார்கள். மஹா ஜனங்கள் யாவரும் தமது தேகத்தைத் தியாகம் செய்துவிட்டு, மஹாவிஷ்ணுவைப் பின் தொடர்ந்தார்கள். உடனே ஸகல தேவர்களும் விஷ்ணுவைத் துதிக்க, எல்லோரும் பரமபதமடைந்து ஸுகமாய் இருந்தார்கள்.

வினா 139.—இவ்வாறு ராமரும் ஸாதாரண ஜனங்